Registered as a News paper in Sri Lanka

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ௵ வைகாசி ௴ 5 ஆம் உ | சனிக்கிழமை | (19 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 23 | ஓசை 90

## தேனிசைக் குழுவினருக்கு தமிழீழ மண்முடிப்பு தர்மபுரத்தில் அன்பளிப்பு

(தர்மபுரம்)

தர்மபுரத்தில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் வியாழன் (17 - 05 - 1990) அன்று இடம்பெற்ற தேனிசைச் செல்லப்பாவின் புரட்சிப் பாடல் இசை நிகழ்ச்சியின் போது கலந்து கொண்ட தமிழக இசைக் கலைஞர்கள் அனைவர்க்கும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதித் தலைவருமாகிய கோபாலசாமி - மகேந்திரராஜா (மாத்தயா) அவர்களினால் தமிழீழ மண்ணில் இருந்து ஒவ்வொருபிடி மண்முடிப்பு வழங்கி கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

அடக்கி ஒடுக்கப்படும்

# மலையகதமிழருக்கு ஆதரவாக தமிழீழத்தில் பூரண ஹர்த்தால்!

## 21 ஆம் திகதி அனுஷ்டிக்க மக்கள் முன்னணி கோரிக்கை

(தர்மபுரம்)

மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக தொடரும் சிங்கள இராணுவ ஒடுக்கு முறையைக் கண்டித்து எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை பொது வேலை நிறுத்தம் (ஹர்த்தால்) செய்யும் படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டுக் கொள்கிறது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் இவ் அறிக்கையில் மலையகம் வாழ் தமிழ் மக்களை தொடர்ந்து சிங்கள அரசு அடக்குமுறைக்குள்ளாக்கி வருகின்றது அங்கு வாழும் தமிழ் மக்களுக்காக யாரும் குரல் தர முன்வரவில்லை. இந் நிலையில் அண்மையில் ஸ்ரீலங்கா அரசு ஒருதலைப் பட்சமாக 100,000 மலையகம் வாழ் தமிழ் மக்களை நாடு கடத்த முனைந்துள்ளது.

அதை எதிர்த்து எழுந்த போராட்டத்தின் எழுச்சியை கடந்த வாரம் முதல் சிங்கள அரசு தனது காவல் துறையைக் கொண்டு அடக்க முயன்று வருகின்றது.

**மலையக மக்கள் கைது, கொலை**

அண்மைக் காலங்களில் மலையகத்தில் பல தமிழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஹமீத் திங்கள் வரார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருவதற்குத் திட்டமிட்டிருந்த வடக்குக் கிழக்கு சமாதானக் குழுத்தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் திங்கட்கிழமை வரமாட்டாரென்றும் அநேகமாக செவ்வாய்க்கிழமை வரலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்து சந்திப்பு ஒத்திவைக்கப்படவும் கூடும்.

### சட்ட விரோத கட்டிடங்களை இடிக்க உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் அங்கீகாரமோ அனுமதியோ பெறாமல் சட்ட விரோதமாக கட்டிய கட்டிடங்களை இடித்துத் தள்ளுமாறு கொழும்பு மாநகரசபை உத்தரவிட்டுள்ளது.

புறக்கோட்டை, கோட்டை பகுதியிலுள்ள பல கட்டிடங்கள் இதனால் விரைவில் இடித்துத் தள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### உணவு முத்திரை அரிசியில் மணல் கலப்பு

(வந்தாறுமூலை)

ஏறாவூர் வடக்கு மேற்கு கூட்டுறவு சங்கக் கடைகளில் உணவு முத்திரைக்கான அரிசியில் மணல் கலக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் புகார் தெரிவித்துள்ளனர். ... டவர்களுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை வழங்கப்படும் ஏழை மக்களுக்கு இவ்வாறு கலப்படம் செய்யப்பட்டது குறித்து மக்கள் கவலை ...

### பொலிஸ் படும்பாடு!

(கம்பளை)

கம்பளையில் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ரிசேர்வ் பொலிஸ்காரர் ஒருவர் வழியில் பொலிஸ் சோதனைக்குட்பட்ட போது கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் நேற்று கிழக்கிலங்கையில் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸ்காரர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழ் போராளிக்கு உதவுவதற்கு

### ஆயுதம் தயாரித்ததாக தமிழ் நாட்டில் ஐவர் கைது

(கோயம்புத்தூர்)

இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு வழங்குவதற்காக ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகளின் உதிரிப்பாகங்களைத் தயாரித்ததாக கோயம்புத்தூரைச் சேர்ந்த ஐந்துபேரை தமிழக இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதாக இருந்தது.

இந்த வழக்கில் முதல் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர் ஆர். எம். சாமி ஆவர். இவர் திராவிடக்கழக உறுப்பினரான திரு. கே. இராமகிருஷ்ணனின் ஆதரவாளராவர்.

இந்தக் கோஷ்டியினர் வீரமணி தலைமையிலான திராவிடக் கழகத்தில் இருந்து பிரிந்து விட்டது. ஆர். எம். சாமி கோயம்புத்தூர் பட்டறையில் இருக்கின்றார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

### ரயிலில் மதுபோதையில் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறையிலிருந்து சென்ற தபால் ரயிலில் மதுபோதையில் சிலர் அட்டகாசம்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பேச்சில் சந்தேகம் எழுகின்றது

**- மகேந்திரராசா**

(தர்மபுரம்)

பேச்சு வார்த்தை, சமாதானம் எனக் கூறிக் கொண்டு சிறிலங்கா அரசு குண்டு வீசும் விமானத்தை வேவுபார்க்க அனுப்புகின்றது, இது எமக்கு சிறிலங்கா அரசின் சமாதானப் பேச்சு வார்த்தை குறித்து சந்தேகங்களை எழுப்பியுள்ளது என நேற்று முன்தினம் தருமபுரத்தில் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர்கோ.

(6ஆம் பக்கம் பார்க்க)

### தலவாக்கொல்லை ஹட்டனில் உண்ணாவிரதம்

**வேலை நிறுத்தத்தில் 10,000 பேர்**

(தலவாக்கொல்லை)

... தும்படியும் கைதான இளை ... தும் திட்டத்தை கைவிடும்படியும் கேட்டு ஹட்டன் மாரியம்மன் கோவில் முன் இருநூறு பேர் மூன்று நாள் உண்ணா விரதம் ஆரம்பித்துள்ளனர்.

இதே சமயம் இக் கோரிக் ...

### வெளிமாவட்டத்தில் சேவைசெய்யாத

மாநகரசபை உத்தரவிட்டுள்ளது.

புறக்கோட்டை, கோட்டை பகுதியிலுள்ள பல கட்டிடங்கள் இதனால் விரைவில் இடித்துத் தள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

களை தொடர்ந்து சிங்கள அரசு அடக்குமுறைக்குள்ளாக்கி வருகின்றது அங்கு வாழும் தமிழ் மக்களுக்காக யாரும் குரல் தர முன்வரவில்லை. இந் நிலையில்

100,000 மலையகம் வாழ் தமிழ் மக்களை நாடு கடத்த முனைந்துள்ளது.

அதை எதிர்த்து எழுந்த போராட்டத்தின் எழுச்சியை கடந்த வாரம் முதல் சிங்

முயன்று வருகின்றது.

**மலையக மக்கள் கைது, கொலை**

அண்மைக் காலங்களில் மலையகத்தில் பல தமிழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

இவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதாக இருந்தது.

இந்த வழக்கில் முதல் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர் ஆர். எம். சாமி ஆவர். இவர் திராவிடக்கழக உறுப்

(6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம் பக்கம் பார்க்க)

# உணவு முத்திரை அரிசியில் மணல் கலப்பு

(வந்தாறுமூலை)

ஏறாவூர் வடக்கு மேற்கு கூட்டுறவு சங்கக் கடைகளில் உணவு முத்திரைக்கான அரிசியில் மணல் கலக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை வழங்கப்படும் ஏழை மக்களுக்கு இவ்வாறு கலப்படம் செய்யப்பட்டது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# 2ஆவது நடமாடும் செயலகம் வெல்லாவெளியில் நடக்கும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் 2 ஆவது நடமாடும் செயலகம் வெல்லாவெளி உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும்.

இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் அண்மையில் வெல்லாவெளி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் பிரதம லிகிதர் எஸ். வீரகேசரி தலைமையில் நடைபெற்றது.

தலைமையக உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அமைப்பாளர் நெல்சன் சமூகசேவைகள் உதவி அத்தியட்சகர் திரு இரா. தியாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணம் பெறாதவர்கள் கச்சேரிக்கு அலைகிறார்கள்

(ஈச்சமோட்டை)

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் மீளக்குடியமர்தல் நிவாரணம் இரண்டாயிரம் ரூபாவை பெறாதவர்கள் தினமும் யாழ். செயலகத்துக்கு வந்து அலைந்து திரிகின்றனர்.

சிலரது பெயர்கள் நிவாரணத்துக்கு சிபார்சு செய்யப்பட்டும் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது, கிராமசேவகரிடம் அனுப்பப்பட்டுள்ளது என்ற பதில் செயலகத்தில் கூறப்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிராமசேவகரிடமும், வங்கியிலும் விசாரித்தால் கச்சேரியில் விசாரியுங்கள் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவர் திட்டமிட்டு திறமையாக தமிழ் மண்ணை ஆக்கிரமித்துள்ளார்கள்

- யோகி

திருமலையில் ஒவ்வொரு மைலுக்கும் ஒவ்வொரு இராணுவ முகாம், அதனைச் சுற்றிவர சிங்களக் குடியேற்றங்கள் இருக்கும் இல்லையெனில் காடுகளில் ஒரு இராணுவ முகாம் இருக்கும் அதனைச் சுற்றி ஒரு சிங்களக் குடியேற்றம் ஏற்படும். தமிழ்மக்களின் இடங்கள் யாவும் சிங்களவர் குடியேற்றப்பட்டுள்ளார்கள் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள் சிங்களவர்கள் திட்டமிட்டு திறமையாக தமிழ் மண்ணை ஆக்கிரமித்துள்ளார்கள். என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் பேசும்போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலா

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர்கள் அசமந்தப்போக்கு

(வவுனியா)

வவுனியா அரசாங்க வைத்திய சாலையில் வைத்தியர்களின் அசமந்தப் போக்கினால் சிகிச்சைக்காக வரும் வெளி நோயாளர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

கடந்த புதன்கிழமை காலை (16.05 90)மேற்படி வைத்திய சாலைப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது நூற்றுக்கணக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தலவாக்கொல்லை ஹட்டனில் உண்ணாவிரதம்

## வேலை நிறுத்தத்தில் 10,000 பேர்

(தலவாக்கொல்லை)

கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் மலையக முன்னணித் தலைவர் திரு. சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரி தலவாக்கொல்லை ஸ்ரீகதிரேசன் கோவில் முன் இருபது பேர் நேற்று மூதல் உண்ணா விரதம் ஆரம்பித் துள்ளனர்.

திரு. சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரியும் மலையக இளைஞர்களை கைதுசெய்வதை உடன் நிறுத்தும்படியும் கைதான இளைஞர்களை விடுதலை செய்யும் படியும், மலையக தமிழர்களை கட்டாயமாக நாடுகடத்

(6ஆம் பக்கம் பார்க்க)

தும் திட்டத்தை கைவிடும்படியும் கேட்டு ஹட்டன் மாரியம்மன் கோவில் முன் இருநூறு பேர் மூன்று நாள் உண்ணா விரதம் ஆரம்பித் துள்ளனர்.

இதே சமயம் இக் கோரிக்கைகளை முன் வைத்து கடந்த பதினாறாம் தேதி ஆறுதோட்டங்களில் ஆரம்ப

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகர சபைக்கு மா.சபை 50லட்சம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாண வேலைத் திட்டங்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாண அரசினால் 50 இலட்சம் ரூபா நிதியுதவி விரைவில் கிடைக்கவுள்ளது.

இப் புனர்நிர்மாணப் பணிகளில் நீர் விநியோகம், நவீன சந்தைப் புனரமைப்பு, வீதித் திருத்த வேலைகள் உட்படப் பல புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிதி வழங்கல் சம்பந்தமான உறுதிமொழியை வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் திரு.ஏ.கே. பத்மநாதன் யாழ். செயலகத்தில் வைத்து யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் வழங்கியுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுநகரில் ஆசிரியருக்கு இருவருட சம்பள முற்பணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொழில் புரியும் ஆசிரியர்களுக்கு இரண்டு வருட சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

நிதிப் பற்றாக் குறையால் முற்பணக் கொடுப்பனவு ஒரு வருட காலத்துக்கு மேலாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது

ஏற்கனவே இருவருட சம்பளம் முற்பணம் பெற்ற ஆசிரியர்களின் சம்பளத்தில் கழிக்கப்படும் பணத்திலிருந்து மாதம் 20 பேர் என விண்ணப்பங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு கடன் வழங்க மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கு.

(6ஆம் பக்கம் பார்க்க)

---

## புதிய லொறி கொள்வனவு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய லொறி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மக்கள் வங்கி எட்டு லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

---

## 5 நாட்களாக அகற்றப்படாத முறிந்த மரக்கிளை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக முன்றலில் நிற்கும் மரம் ஒன்றின் முறிந்த பெரிய கிளை ஒன்று எவரும் அகற்றுவார் அற்ற நிலையில் கடந்த ஐந்து நாட்களாக உள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்த மரம் முறிந்தது. ஆனால் இன்று வரை அதை செயலக நிர்வாகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடதக்கதாகும். (லோ)

# சமாதானப் பேச்சில் சந்தேகம் எழுகின்றது

(தர்மபுரம்)

- மகேந்திரராசா

பேச்சு வார்த்தை, சமாதானம் எனக் கூறிக் கொண்டு சிறிலங்கா அரசு குண்டு வீசும் விமானத்தை வேவுபார்க்க அனுப்புகின்றது, இது எமக்கு சிறிலங்கா அரசின் சமாதானப் பேச்சு வார்த்தை குறித்து சந்தேகங்களை எழுப்பியுள்ளது என நேற்று முன்தினம் தருமபுரத்தில் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர்கோ.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெளிமாவட்டத்தில் சேவைசெய்யாத ஆசிரியர்களுக்குக் கட்டாய இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை வெளி மாவட்டப் பாடசாலைகளில் சேவை புரியாமல் யாழ். மாவட்டத்திலேயே 10 ஆண்டுகளாகக் கடமைபுரிந்த 45 வயதிற்குட்பட்ட ஆசிரியர்கள் மிக விரைவில் வெளி மாவட்டத்திற்குக் கட்டாய இட மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவ்விடமாற்றம் தொடர்பான உடனடி நடவடிக்கைகள் வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சகல ஆசிரியர்களின் சேவைக் காலம் பற்றிய விபரங்களை வடக்குக் கிழக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம் மக்கள் வங்கியில் நகைகள் மீளளிப்பு

(முல்லைத்தீவு)

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் பணம் செலுத்தியவர்களுக்கு அடகுநகைகள் கடந்த புதன்கிழமை மாங்குளம் மக்கள் வங்கி கிளையில் வைத்து வழங்கப்பட்டது.

கொக்கிளாய், வெலிகம, நீர்கொழும்பு பகுதியில் உள்ள பெரும்பான்மையினரும் முன்னர் இந்த வங்கியில் அடகு வைத்த நகைகளை இதன்படி பெற்றுக் கொண்டனர்.

அறுபத்திநான்கு பேர்இவற்றைப் பெற இங்கு சமூகமளிக்கவில்லை என்றும் வேறொரு தினத்தில் அதனைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மண்ணின் பெருமை பற்றித் தர்மபுரத்தில் கவிஞர் காசி

(தர்மபுரம்)

தர்மபுரத்தில் நேற்றுமுன் தினம் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் மண் முடிப்புவழங்கும்வைபவத்தில் கலந்துகொண்டுபேசியகவிஞர் காசிஆனந்தன் தமிழீழ மண்ணின்பெருமை பற்றிக் குறிப்பிட்டார்.

தமிழ்ஈழ மண் எங்கள்அரும் பெரும் தலைவர் பிரபாகரன் பிறந்த மண். எங்களுடைய விடுதலைப் புலிகள் நடந்து போராடிய மண். அவர்கள் களத்தில் இரத்தம்சிந்தி அந்த இரத்தம் தோய்ந்த மண். அவர்கள்எதிரிகளோடுபோராடிய நேரத்தில் அவர்கள் மறைந்து வாழ்ந்தகாடுகள் வளர்ந்த மண். அவர்கள் நடந்த பாதைகள் அமைந்தமண். அவர்களில் பலர் மடிந்து புதைந்து மண்ணோடுமண்ணாகிய மண். எதி

(6ஆம் பக்கம் பார்க்க)

# பீ.ஜீ. 34-4இனநெல்லை பாவிக்க வேண்டாம் என கோரிக்கை

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும் போகத்தில் பயிர் செய்யப்பட்ட (B. G. 34-4) பீ. ஜீ, 34-4 என்ற நெல்லினம் எரிபந்த நோயினால் அதிகம் பாதிக்கப்பட்ட காரணத்தினால், அப்பயிரில் இருந்து பெறும் விதை நெல்லை இம் முறை பயிர் செய்ய உபயோகிக்க வேண்டாம் என்று விவசாயப் போதனாசிரியர்கள் கேட்டுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# நிந்தவூரில் வீதிகள் அவலம் சிரமதான மூலம் திருத்தவேலை

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பகுதியில் பல வீதிகள் படுமோசமான நிலையில் காட்சியளிக்கின்றன. சில வீதிகளை சிரமதான மூலம் திருத்தியமைப்பதற்கு, நிந்தவூர்ப் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளனர்.

நிந்தவூர்ப்பிரதேசப்பொறுப்பாளர் திரு. விக்ரம், இதற்கான திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

தற்பொழுது நடைபெறும் சிறுபோக நெல் விதைப்பு வேலைகள் முடிவடைந்து உழவு இயந்திரங்கள் வேலைக்கு அமர்த்தக்கூடிய வசதி ஏற்பட்டதும்இந்த வீதிகளை திருத்த சிரமதான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இந்த சிரமதான வேலைத் திட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சர்வோதயம் முதலான சமூகசேவை இயக்கங்களையும் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் தியேட்டர் வீதி, அட்டப்பள்ளம் பிரதான வீதி முதலான முக்கிய வீதிகளைத் தமது சிரமதான மூலம் திருத்தியமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. (53)

## குறைந்த கட்டணத்தில் மூக்குக்கண்ணாடி

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள வறியவர்களும், பாடசாலை மாணவர்களும் குறைந்த கட்டணத்தில் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள காத்தான்குடி அஷ்ஷஹீத் அல்ஹாஜ் அகமது லெவ்வ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆரம்ப நடவடிக்கையாக விஷேட கண்பரிசோதகர்களை இந்நிறுவனத்தினர் சமீபத்தில் காத்தான்குடிக்கு அழைத்துவந்து பரிசோதனை முகாம்களை நடாத்தினர். (55)

நெடுந்தீவு

## அவசரசிகிச்சையின் போது மின்சாரம் தேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு வைத்தியசாலைக்கான மின்சார விநியோகம் நோயாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படும் நேரங்களிலும் வழங்கப்பட வேண்டும் எனக்கோரப்படுகிறது. தற்பொழுது மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 10 30 மணி வரையுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. கடந்த வாரத்தில் இரவில் அனுமதிக்கப்பட்ட ஒரு தாயின் மகப்பேற்றுக்கடமைகளை வைத்திய அதிகாரியும் தாதிகளும் கைவிளக்கின் உதவியுடனேயே செய்யவேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரத்தை வழங்கும் இயந்திரத்தை இயக்குபவர் குறித்த நான்கு மணித்தியாலங்களின் பின்னரும் வைத்திய சாலையின் சூழலில் இருக்கப் பணிக்கப்படுவதுடன் அவசர சிகிச்சைக்கு மின்சாரத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள்கோருகின்றனர். (62)

## மாணவர் இயக்கங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் மத்தியில் மாணவர் இயக்கங்களை அமைக்கும் வேலையில் விடுதலைப்புலிகளின்மக்கள் முன்னணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகர சிற்றூரவை அமைப்பாளர் திரு. இநிமால் மாணவர் இயக்க அமைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் இம் மாவட்டதிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் சென்று மாணவர் இயக்கங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். (49)

## கருத்தரங்கு

(விசேட நிருபர்)

யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண எம், ஈ' பயஸ் அடிகளார் இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை „சமுதாய அபிவிருத்தி'' என்னும் தலைப்பிலான நான்கு நாள் வதிவிடக் கருத்தரங்கு ஒன்றை சேந்தான் குளத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்.

மனித முன்னேற்றநடுநிலையத்தால் பராமரிக்கப் பட்டு வரும் புனர் வாழ்வு நிலையங்களில்கடமையாற்றும் தொண்டர்களும், பராமரிக்கப்படுவோரும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்வர். (21)

## புங்குடுதீவில் பெண்களுக்கு நெசவுசாலையில் பயிற்சி

(புங்குடுதீவு)

யாழ். செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் புங்குடுதீவு சந்தையடியில் இயங்கிவரும் நெசவுசாலையில் தற்போது பத்திற்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற யுவதிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கு நாளொன்றுக்கு பதினைந்து ரூபா வீதம் வேதனம் வழங்கப்பட்டு வருவதாகவும் மேலதிக நேரங்களில் பணியாற்றுவோருக்கு அதற்குரிய வேதனமும் வழங்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக சிறப்பாக இயங்கிவரும் இந் நெசவுசாலையில் தயாரிக்கப்படும் துணி வகைகள் யாழ். செயலகத்தின் மூலம் கொள்வனவு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெசவுசாலையில் பணியாற்றும் யுவதிகள் புங்குடுதீவின் பல பகுதிகளிலிருந்தும் கால் நடையாக வந்தே பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. (22)


## பதவி வெற்றிடம்

பொதுமுகாமையார்:— குறியீடு : 115 — 8 (பழையது)

சம்பளம் 500 — 840 / 20 x 5—30 x 8

இக்குறியீடுகளுக்குப் பொருத்தமான புதிய சம்பளத்திட்டத்தின்படி சம்பளமும், படிகளும் வழங்கப்படும்.

வயதெல்லை : 35 தொடக்கம் 45 வரைக்கும்

தகைமைகள் :

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 10வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

குறிப்பு : தற்போது சங்கத்தில் பணியாற்றுபவர்களுக்கும், சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்களை தயாரித்து 02-06-1990க்கு முன்னர் ''தலைவர், யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், 330 கே. கே, எஸ் வீதி யாழ்ப்பாணம்.'' எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

இப்பதவிக்கான நேர்முகப் பரீட்சை 06-06-1990 புதன் கிழமை காலை 9மணிக்கு மேற்படி சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்மேற்படி பதவிக்கு தகுதியான,குறித்த திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(தனித்தனியான அறிவித்தல் எதுவும் அனுப்பப்படமாட்டாது)

1. கல்விச் சான்றிதழ்கள்
2. அனுபவச் சான்றிதழ்கள்
3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4. தேசிய அடையாள அட்டை
5. அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரம்.

தலைவர்
யாழ். மாநகர தெ, ப. உ. வி. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்

B/988



## யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-00,
6.30 & 9.30
BRUCE LEE
IN
RUCELEE THELEGEND
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30,
6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
நிழல்கள் ரவி. நம்பியார்.
சத்தியராஜ்
நடித்த
விலங்கு
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
(புதிய பிரதி)
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
EDDIE MURPHY
IN
BEVERLY HILLS COP
( Color - Scope )

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING
THE IDOL
(Color)

**லிடோ (யாழ்)**
18 முதல் 21 வரை
Daily at. 4. P.M 6.30
& 9.30 P.M.
Sat &Sun&Pud liceHoiiday
10.30 2.30 4.30 6.30 9.30
CAN BE DONE
AMIGO
(color)
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/969


## பழமைவாதிகள் தடுக்கிறார்களாம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் அரசியல் பொருளாதார சீரமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பழமை வாதிகளால் தடைப்பட்டு வருவதாக ஜனாதிபதி கொர்பசேவ் குற்றஞ் சாட்டுகிறார்.

சீரமைப்புகளை நடைமுறைப் படுத்தி, சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்குவதில் மிகக்கடினமான வேலையாக இருப்பது. மக்களின் இப் பழமை வாதத்தை மாற்றுவது தான் என்று அவர் கூறினார்.

பொருளாதார பிரச்சினைகளினால் நாட்டில் பெரும் குழப்பங்கள் ஏற்படுகிறது என்ற செய்தியினை அவர் அலட்சியம் செய்தார்.


Dealers in Motor Spare of



நிமால் மாணவர் இயக்க அமைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் இம் மாவட்டதிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் சென்று மாணவர் இயக்கங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். (49)

லங்களின் பின்னரும் வைத்தியசாலையின் சூழலில் இருக்கப் பணிக்கப்படுவதுடன் அவசர சிகிச்சைக்கு மின்சாரத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள்கோருகின்றனர். (62)

2. அனுபவச் சான்றிதழ்கள்
3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4. தேசிய அடையாள அட்டை
5. அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரம்.

தலைவர்
யாழ். மாநகர தெ, ப. உ. வி. கூ. சங்கம்.
யாழ்ப்பாணம்

B/988

சோவியத் யூனியனில் அரசியல் பொருளாதார சீரமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பழமை வாதிகளால் தடைப்பட்டு வருவதாக ஜனாதிபதி கொர்பசேவ் குற்றஞ் சாட்டுகிறார்.

சீரமைப்புகளை நடைமுறைப் படுத்தி, சந்தைப் பொருளா

மிகக்கடினமான வேலையாக இருப்பது மக்களின் இப் பழமை வாதத்தை மாற்றுவது தான் என்று அவர் கூறினார்.

பொருளாதார பிரச்சினைகளினால் நாட்டில் பெரும் குழப்பங்கள் ஏற்படுகிறது என்ற செய்தியினை அவர் அலட்சியம் செய்தார்.


**Dealers in Motor Spare of**



**Pegeuot 404 - 504**

**Austin A 50, A 60, A 40, A 1100**

**V/W 1200 - 1300 - 1302**

**&**

*Radiator core for all Vehicles*
*Radiator Hose*
*Bearings - Rubber Beadings for doors*

Visit

**ASSOCIATED MOTORS & ELECTRICALS**

285 - 287, Stanley Road,

JAFFNA.

B-935

# வேலை வாய்ப்புக்கோரி மாணவர் ஆர்ப்பாட்டம்

(டாக்கா)

வேலை வாய்ப்புத் தரும்படி ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் மாணவர்கள் இராணுவ படைக்கு ஆள் சேர்க்கும் மத்திய நிலையமொன்றை புதனன்று முற்றுகையிட்டனர்.

வேறு தொழில் வாய்ப்புக்களை எமக்கு வழங்க முடியாது போனால் இராணுவத்திலாவது இடம் தாருங்கள் என்று இம் மாணவர்கள் கோஷமிட்டனர்.

பொலிசார் தலையிட்டு மாணவரை மத்திய நிலையத்திற்கு செல்ல விடாது தடுத்தனர்.

அரச சேவையில் மேலதிகமாக ஊழியர்கள் இருக்கின்றனர். இதனால் ஐந்து வருட காலத்திற்கு புதிதாக எவரையும் சேர்க்கக் கூடாதென அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்தே மாணவர்கள் இராணுவப் படைக்கு ஆள் சேர்க்கும் மத்திய நிலையத்தைச் சூழ்ந்து கொண்டனர்.

## "மிர்" விண்வெளி ஆய்வு நிலையத்தில் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன

(மொஸ்கோ)

விண் பௌதிகவியல் புவி பௌதிக இயல் மருத்துவ உயிரியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கென செலுத்தப்பட்ட "மிர்" விண்வெளி ஆய்வு கூடம் தனது பணியைச் செவ்வனே செய்து வருகிறது என சோவியத் விண்வெளி ஆய்வு பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் ஆய்வு கூடத்தில் புவி பௌதீகவியல் ஆய்வு திட்டத்தின்கீழ் பூமியின் அயனமண்டலத்தையும் காந்த மண்டலத்தையும் சோவியத் விண்வெளி வீரர்களான அனத்தோலி சொலாவியோவ், அலெக்ஸ்தாந்தர் பலாத்தின் ஆகிய இருவரும் முழுமுயற்சியுடன் ஆராய்ந்து வருவதாகவும் மொஸ்கோவிலிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

"மிர்" ஆய்வு கூடத்தில் அண்ட வெளியில் தங்கியுள்ள இவ்விரு வீரர்களும் திடகாத்திரமான உடல் நிலையில் இருப்பதாகவும் அச்செய்தி கூறுகின்றது.

## ஆப்கானில் அவசர நிலை ரத்து

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி நஜிபுல்லா விடுத்த ஆணையின்பேரில் ஆப்கானிஸ்தானில் அவசர நிலைப் பிரகடனம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

தேசியசமரசக்கொள்கைக்கு அதிக வாய்ப்பளிப்பதற்காகவும் ஆப்கான் சமுதாயத்தில் உள்ள அனைத்து அரசியல்சக்திகளையும் பங்கேற்கச் செய்வதற்காகவும் இந் நடவடிக்கையை ஆப்கான் அரசு எடுத்திருக்கிறது.

# யாழ். கிளி. மாவட்டங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் உதவி

(திருக்கோணமலை)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் 1 கோடி 20 லட்சம்ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்க பிரித்தானிய அரசு முன்வந்துள்ளது. இவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் அளவில் இலங்கைக்கு வரவுள்ளன.

இத்தகவலை அண்மையில் திருக்கோணமலையில் நடைபெற்ற வட-கிழக்கு புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுக்கூட்டத்தில் வைத்து மத்திய புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் உயர் அதிகாரியான திரு. ஒஸ்டின் பெர்னாந்து தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரம்

# யுத்தபீதியை பாகிஸ்தான் ஏற்படுத்துகிறது - வி. பி. சிங்

## போர் தவிர்க்க முடியாதது என நான் கருதவில்லை --பெனாசிர்

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தான் போர்ப் பீதியை ஏற்படுத்தி வருவதாகவும், இந்தியா எதற்கும் தயாராக இருக்கிறது என்றும் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் கூறியிருக்கிறார்.



ஒவ்வொரு நாட்டிற்கும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையும், அதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமையும் உண்டு என்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பிரதமர் வி. பி. சிங் குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆதரவு தேடும் நோக்குடன் பாகிஸ்தானின் பிரதமர் பெனாசிர் பூட்டோ இப்போது மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணம் பற்றிக் குறிப்பிட்ட இந்தியப் பிரதமர் "இப்படியொரு பயணம் மேற்கொள்ளப்பட வேண்டுமென பெனாசிர் பூட்டோ கருதியதே இந்த விவகாரத்தில் இந்தியாவிற்கு கிடைத்திருக்கும் ராஜீய ரீதியான வெற்றியை எடுத்துக் காட்டுகிறது" எனக்கூறினார்.

### பெனாசிர் சிரியா சென்றார்

இதற்கிடையில் பாகிஸ்தானின் பிரதமர் பெனாசிர் பூட்டோ அரபு நாடுகளின் விஜயத்தின் மூன்றாவது கட்டமாகத் துருக்கியில் இருந்து சிரியாவிற்கு சென்றிருக்கிறார்

இந்தியாவுடன் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாதது எனத் தான் கருதவில்லை என்றும், ஆனால் இந்தியா வெளியிடும் அறிக்கை இந்தியாவின் நோக்கம் பற்றிய சந்தேகங்களை எழுப்புவதாகவும், துருக்கியில் இருந்து புறப்படுவதற்குமுன்னர் அவர் கூறினார்.



காஷ்மீர் மக்களின் கோரிக்கைகளை மனதில் கொண்டு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகள் நடக்க வேண்டுமெனத் துருக்கிப் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

துருக்கி பாகிஸ்தானுடன் நீண்ட கால நட்புறவு கொண்டிருந்தாலும், இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கவும் விரும்புகிறது.

# பிலிப்பைன்ஸ் விமான விபத்தில் 25பேர் உயிர் இழந்துள்ளனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தில் 25 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இரட்டை என்ஜின் பூட்டிய இவ்விமானம் காபூல் விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட இரண்டு நிமிடங்களிலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

இதில் பயணம் செய்த அனைத்துப் பிரயாணிகளும் இறந்துள்ளனர்.

# தொழிற்சாலைகள் அமைக்க இலங்கை வங்கி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகளை அமைப்பவர்களுக்கு நிதியுதவி வழங்க யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கி முன்வந்துள்ளது. இப்பகுதியில் தொழிற்சாலைகளை அமைக்க விரும்பும் தனிநபர்களோ, அன்றி பங்காளர்களோ தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

எமது பிரதேசத்திலுள்ள மூலவளங்களைப்பயன்படுத்தி பல தொழிற்சாலைகளை அமைக்க முடியும். இதனால் எமது பொருளாதாரம் வளம் பெறுவதுடன், வேலை இல்லாப் பிரச்சினை பெருமளவில் குறையும் என அவர் கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது முன்பு இயங்கிவந்த தொழிற்சாலைகள் அண்மையிலேற்பட்ட நாட்டு நிலமையால் இயங்காது மூடப்பட்டன. இனிமேல் அவற்றை இயங்கச் செய்ய உரியவர்கள் முன்வர வேண்டும். மேற்படி நிதியுதவி கடனாகவே வழங்கப்படுமெனவும், அவற்றை முழுமையாக திருப்பி கட்டத் தேவையில்லை என்றும் பகுதி பகுதியாக செலுத்தினால் போதுமெனவும் கூறினார்.

இதைவிட சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்புபவர்களுக்கு 25 ஆயிரத்திற்குட்பட்ட கடன் வழங்கப்படும் எனவும் இதனை இளைஞர், யுவதிகள் பயன்படுத்த வேண்டும் எனவும் மேற்படி வங்கி அதிகாரி தெரிவித்தார். (மு)

## சேவைக்கால பயிற்சி

(யாழ்நகர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் க. பொ. த. (உயர்தரம்) வகுப்புக்களில் வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4,00 மணி வரை நடைபெற உள்ளது. (52)

# நீரை நாங்கள் கட்டுப்பாட்டுடன் பயன் படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் நீண்ட காலத்திற்கு தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் தற்போது நாம் பாவனைக்கு எடுத்து கொள்ளும் நீரை கட்டுப்பாடாக பாவிக்க வேண்டும். எதிர் காலத்தில் நாம் தொடர்ந்து நீரை சீரழிவு செய்வோமாயின் விரைவில் உப்பு நீரை அருந்த வேண்டியவர்களாகி விடுவோம் என நீர்வள வேலைப்பகுதி பிரதம பொறியியலாளர் தெரிவிக்கிறார்.

யாழ். மாநகர பகுதிக்கு தற்போது நீர் பெற்றுக் கொள்ளப்படும் முறைபற்றி அவர் தெரிவித்ததாவது எமக்கு இப்பொழுது தினமும் நான்கு லட்சம் கன அடிநீர் தேவையாக உள்ளது இதனை திருநெல்வேலி, கோண்டாவில் போன்ற இடங்களில் இருக்கும் பாரிய கிணறுகள் மூலம் பெற்றுக்கொள்கிறோம் இக்கிணறுகளில் இருந்து தொடர்ந்து எம்மால் நீரை பெற்றுக் கொள்ளமுடியாது உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந் நீர்ப் பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் எம்முடன் பொதுமக்கள் பெருமளவு ஒத்துழைக்க வேண்டும் அன்றி எம்மால் எல்லோரது நீர்த் தேவையையும் பூர்த்தி செய்வது மிகக் கடினம் என்றார்.

# புகையிரதத்தில் வந்த பயணிகள் பஸ் இன்றி அவதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று இரயில் மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு வந்திறங்கிய ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல வசதியின்றிப் பெரும் அவதிக்குள்ளாயினர். இவர்களில் சிலர் பலமணி நேரம் புகையிரத நிலையத்திலேயே

கக்கூடியதாக இருந்தது.

யாழ். பிரதம புகையிரத நிலையத்திற்கு புகையிரதம் நேரத்திற்கு வந்துவிட்டபோதிலும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் நேற்று சமுகம் தரதவறியமையே தாம் இவ்வாறு நிர்க்கதியாக நிற்கக்காரணம் என அப் பயணிகள் சினந்து கொண்டனர்.

# ஈழத் திருமணிகள்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, நாவலர் பாடசாலையில் 1917ஆம் ஆண்டில் தொடங்கிய காவிய வகுப்பில் மாணாக்கர் பலர் சேர்ந்தனர். அவர்களுள் 'பிள்ளை'கள் இருவர். முதலில் சேர்

புலவர்மணி அவர்களின் 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' நூல் வெளியீட்டு விழாவும், பண்டிதமணி அவர்களின் 'செந்தமிழ்க் களஞ்சியம்', 'பண்டிதமணி நினைவுமலர்' என்ற நூல்களின் அறிமுக விழாவும்

## புனர்வாழ்வுப் படிவங்கள்

(வவுனியா)

ஓமந்தையில் ஐந்து கிராமங்களை உள்ளடக்கிய கிராம

(திருக்கோணமலை)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் 1 கோடி 20 லட்சம்ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்க பிரித்தானிய அரசு முன்வந்துள்ளது. இவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் அளவில் இலங்கைக்கு வரவுள்ளன.

இத்தகவலை அண்மையில் திருக்கோணமலையில் நடைபெற்ற வட-கிழக்கு புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுக்கூட்டத்தில் வைத்து மத்திய புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் உயர் அதிகாரியான திரு. ஒஸ்டின் பெர்னாந்து தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆதரவு தேடும் நோக்குடன் பாகிஸ்தானின் பிரதமர் பெனாசிர் பூட்டோ இப்போது மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணம் பற்றிக் குறிப்பிட்ட இந்தியப் பிரதமர் ''இப்படியொரு பயணம் மேற்கொள்ளப்பட வேண்டுமென பெனா

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தில் 25 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இரட்டை என்ஜின் பூட்டிய இவ்விமானம் காபூல் விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட இரண்டு நிமிடங்களிலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

இதில் பயணம் செய்த அனைத்துப் பிரயாணிகளும் இறந்துள்ளனர்.

யாழ். மாநகர பகுதிக்கு தற்போது நீர் பெற்றுக் கொள்ளப்படும் முறைபற்றி அவர் தெரிவித்ததாவது

அன்றி எம்மால் எல்லோரது நீர்த் தேவையையும் பூர்த்தி செய்வது மிகக் கடினம் என்றார்.

# ஈழத் திருமணிகள்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, நாவலர் பாடசாலையில் 1917ஆம் ஆண்டில் தொடங்கிய காவிய வகுப்பில் மாணாக்கர் பலர் சேர்ந்தனர். அவர்களுள் 'பிள்ளை'கள் இருவர். முதலில் சேர்ந்த பிள்ளை கணபதிப்பிள்ளை. மூன்று மாதங்கழித்துச் சேர்ந்த பிள்ளை பெரியதம்பிப்பிள்ளை.

ஈழத்துப் பூதந்தேவனாரில் இருந்து, நிலத்துக்குக் கீழ் ஊற்றெனத் தொடர்ந்த புலமை கனிந்த இலக்கியப் பரம்பரையில் வந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள், காவிய வகுப்பில் ஓர் ஆசிரியர். நாவலர் பெருமானின் பெறாமகனும், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களின் மைத்துனரும் மாணாக்கருமான ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் மற்றைய ஆசிரியர்.

ஆசிரிய இலட்சணங்களுக்கு அணி செய்த இவ்வாசிரியர் இருவரிடமும் சடறக் கற்ற மாணாக்கருள், மேற்குறித்த பிள்ளைகள் இருவரும் தலையாயவர்.

தலையாய இவ்விருவரும் தமிழ்த் தலைப்பட்டு, ஈழத் திருமணிகள் ஆனவர்கள். (ஈழத்திருமணிகள் - ஈழத்து இரு மணிகள், ஈழம் பெற்ற திரு மணிகளுமாம்),

ஒருவர் பண்டிதமணி. அடுத்தவர் புலவர்மணி. கருவிலே திரு அமைந்த இவ்விரு மணிகளும், நாவலர் காவிய பாடசாலை என்ற ஒரே சுனையில் உற்பவித்து, ஈழத்துத் திசைகள் இரண்டில் நிலை கொண்டு தமிழ் செய்தவர்கள்

இரு மணிகளும் பேச்சாயும் எழுத்தாயும், கற்பித்தவாயும் வெளிப்படுத்திய ஒளி, தமிழ் ஒளி, ஈழத் திருநாட்டைக் கடந்து தமிழ் கூறு நல்லுலகமெங்கும் வியாபித்தது.

கந்தபுராண கலாசாரத்தின் தன்மையும் தொன்மையுங் காட்டி, தாம் கண்ட தக்ஷ காண்ட உரையானை மீதிவர்ந்து வருந் தகைமை கொளவாக்கி, சிந்தனைக் களஞ்சியமாய், செந்தமிழ்க் களஞ்சியமாய், அத்வைத சிந்தனை செய்து அன்பினைந்திணையும் அதன் திறவுகோலுந் தந்து தமிழைத் தமிழ் செய்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு யுகபுருஷர்.

சைவம், வைணவம் என்றித் தொடக்கத்து இந்து மதச் சார்புகள் யாவும் வேறுபல மத தத்துவக்குழுக்கள் யாவும் ஏத்துகிற ஒரு நூல் பகவத்கீதை இதன் மூலம் வடமொழியில் அமைந்தது. திருக்குறள் போல, பலமொழிகளில் பெயர்க்கப்பட்ட ஒரு நூல் பகவத்கீதை தமிழில் பகவத்கீதைக்கு உரை செய்த அளப்பரிய பரிமாணத்தைக் காட்டி நிற்கிறது.

மஹாபாரதம் பண்டிதமணி அவர்களின் சிந்தைக்கினியது. அங்கும், கீதோபதேசம் அர்வகளது உயிர் அவ்வாறான கீதையைக் கவிசெய்த புலவர்மணி அவர்களைப் 'பாட்டுக்கு இவன் என்பன் யான்'' எனத் தீர்மானித்ததையும் இருவர் மணிகளுக்கிடையில் நிலவிய ஒருவர் அறிவை ஒருவர் மதித்துப் போற்றும் தகைமையை வெளிப்படுத்தி நிக்கிறது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் நடாத்தும் புலவர்மணி அவர்களின் விபுலானந்தர் மீட்சிப் பத்துநூல் வெளியீட்டுவிழாவும் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி அவர்களின் ''பண்டிதமணி நினைவு மலர்'' ''செந்தமிழ்க் களஞ்சியம்'' நூல்கள் அறிமுக விழாவும் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு மகாவித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராசா தலைமையில் நடைபெறுகிறது. இதையொட்டி இக்கட்டுரை இங்கு தரப்படுகிறது. (ஆ-ர்)

வர் பலர் ஆயினும் செய்யுள் நடை மொழிபெயர்ப்பு, நாம் அறிந்தவரை ஒன்றே ஒன்று தான் அது, ''பகவத்கீதை வெண்பா'' இதனைச் செய்த பேரறிஞர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

புலவர்மணி அவர்களின் கீதை வெண்பாவுக்குப் பண்டிதமணி அவர்கள் அளித்த அணிந்துரை:

கீதை கவிசெய்து கீர்த்தி
மிகப்பெற்றான்
ஏபெரிய தம்பி எனதன்பன்
- ஓதக்கேள்
பாட்டுக்கொரு புலவன்
பாரதியென்றா ரொருவர்
பாட்டுக் கிவனென்பன்
யான்''

பண்டிதமணி அவர்கள் என தன்பன்' எனப் புலவர் மணி அவர்களை மட்டுமே தம் வாழ்வில் குறிப்பிட்டுள்ளார் என்பது, இவ் இருவர் மணிகளுக்கிடையே நிலவிய அன்பின்

காலத்தாலும் கருத்தாலும் ஒருமைப்பட்ட இருவர் மணிகளும் இந் நூற்றாண்டில் தமிழ்ப்பணி புரிந்தோருள் முதன்மையானவர்கள்.

பண்டிதமணி அவர்களின் ஆக்கங்கள் பல நூலுருப் பெற்று வெளியிட்டு விழாக்கள் கண்டவை. புலவர்மணி அவர்களின் ஆக்கங்களும் அவ்வாறே.

எனினும், இருவர் மணிகளாக்கங்களும் ஒரே முகூர்த்தத்தில், ஒரே அரங்கில் வெளியீட்டு விழாவையும் அறிமுக விழாவையும்காண்பது இதுவே முதல் தடவை.

இவ் வரங்கு, 20-05-90 ஞாயிறு முற்பகல் 9-00 மணிக்கு, மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில், மகாவித்துவான் F. X. C. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெறுவது ஒரு நல்ல சகுனம்.

புலவர்மணி அவர்களின் 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' நூல் வெளியீட்டு விழாவும், பண்டிதமணி அவர்களின் 'செந்தமிழ்க் களஞ்சியம்', 'பண்டிதமணி நினைவுமலர்' என்ற நூல்களின் அறிமுக விழாவும் ஒருங்கே நடைபெறும் அந் நாள் ஒரு நன்னாள்.

## சுமுகன்

இந் நன்னாளும், நற் சகுனமும் ஈழமணித்திருநாட்டின் வடக்கும்-கிழக்கும் அனைத்துக் கலை கலாசாரங்களிலும் நிரந்தரமாக இணைந்து இசைவுகாணும் கால்கோளாக அமைவனவாக.

இந் நிகழ்ச்சியை நிதர்சனமாக்கிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தினர் பாராட்டுக்குரியவர். அவர் தம் பணி தொடரட்டும்.

## புனர்வாழ்வுப் படிவங்கள்

(வவுனியா)

ஓமந்தையில் ஐந்து கிராமங்களை உள்ளடக்கிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 256 குடும்பங்களுக்கு பாதிப்படைந்தோர் புனர்வாழ்வுப்படிவங்கள் வழங்கப்பட்டன.

ஓமந்தை, அரசமுறிப்பு, விளாத்திக்குளம், வேப்பங்குளம் அரசங்குளம் போன்ற கிராமங்களை உள்ளடக்கிய கிராம சேவையாளர்பிரிவிற்கு வவுனியாதெற்கு, தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திருமதி, இமெல்டா அற்புதராஜாவினால்மேற்படி புனர்வாழ்வுப் படிவங்கள் வழங்கப்பட்டன.

ஓமந்தையில் கமநல சேவை நிலையத்தில்வைத்துசில தினங்களுக்கு முன்னர் இவை வழங்கப்பட்டன. (தி)

# பாடசாலைகளுக்கு கட்டிடம் அமைக்க நடவடிக்கை

(வவுனியா)

தற்காலிககட்டடங்களிலும், வேறு இடங்களிலும் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு நிரந்தரமாக புதிய கட்டடங்கள் அமைத்துக் கொடுக்க வவுனியா கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

வவுனியா மாவட்டத்தில் உள்ளபலகிராமங்களில்கடந்த மாதம் 44 புதிய பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டன. இவற்றில்பாடம் படித்துவரும் மாணவர்களில் பலர் தற்காலிக இடங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

இக் குறைபாடுகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்று சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

பல பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர், அதிபர் பற்றாக் குறைகளும் தீர்க்கப்படும் என்றும் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர் கோவிற்புதுக்குளம் பாடசாலைக்குப் புதிதாய் திருமதி எஸ். வரதராஜா நிரந்தரமாக நியமிக்கப் பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார். (தி)

## பயணிகளுடன் சேஷ்டை

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த யாழ்தேவி ரயிலில் இயக்க உறுப்பினர் என்று இனம் காட்டிக் கொண்டு அட்டகாசம் செய்து வந்த இளைஞர் ஒருவருக்கு விடுதலைப்புலிகள் வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து புதுவிதமான தண்டனை வழங்கினார்கள்.

மேற்படி இளைஞர் பயணிகளின் 'பார்சல்களை' பரிசோதனை செய்வதும் பயணச் சீட்டை வாங்கிப் பார்ப்பதுமாக பல சேஷ்டைகள் செய்து வருகிறார் என்று பிரயாணிகள் புலிகளிடம்புகார்தெரிவித்ததையடுத்து, வவுனியா ரயில் நிலையத்தில் அவர் கீழே இறக்கப்பட்டு நடந்து போகுமாறு பணிக்கப்பட்டார். (தி)

# புகையிரதத்தில் வந்த பயணிகள் பஸ் இன்றி அவதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று இரயில் மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு வந்திறங்கிய ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல வசதியின்றிப் பெரும் அவதிக்குள்ளாயினர். இவர்களில் சிலர் பலமணி நேரம் புகையிரத நிலையத்திலேயே தங்கியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

யாழ். பிரதம புகையிரத நிலையத்திற்கு புகையிரதம் நேரத்திற்கு வந்துவிட்ட போதிலும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் நேற்று சமுகம் தரதவறியமையே தாம் இவ்வாறு நிர்க்கதியாக நிற்கக்காரணம் என அப் பயணிகள் சினந்து கொண்டனர். (லோ)

# பட்டதாரி எழுதுவினைஞருக்கு பதவி உயர்வு

(திருக்கோணமலை)

எழுது வினைஞர் பதவிகளிலுள்ள பட்டதாரிகள் நிர்வாக மட்டத்திலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாக மாகாண உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பட்டதாரிகளாக இருந்தும் தமது தகைமைக்கேற்ற தொழில்களுக்கு நியமிக்கப்படாது திணைக்களங்களில் எழுதுவினைஞர் தொழில்களுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தினால் நன்மை கிடைக்கும்.

மாகாண உள்துறை அமைச்சினால் இதுதொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

தற்போதைய பதவிகளில் குறைந்தது 10 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களே இத்திட்டத்தினால் நன்மையைப் பெறுவார்கள்.

# சுகாதார சோதனையின்றி இறைச்சி விற்பனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதிகளில் விற்பனையாகும் இறைச்சி பொது சுகாதார பரிசோதகர்களின் அனுமதியின்றி வெட்டப் படும் கால்நடைகளில் இருந்து பெறப்படுகிறதாக பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இங்கு விற்கப்படும் இறைச்சியில் சுகாதாரப் பகுதியினர் பரிசோதனை முத்திரை காணப்படுவதில்லை.

இறைச்சி விற்பனை தொடர்பாக மாநகர சபையின் சட்டவிதிகளை இறைச்சி விற்பனையாளர்கள் மீறி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இறைச்சி கடைகளுக்கு வெளியே தொங்க விடப் படுவதால் தூசி மற்றும் ஈக்கள் அதில் பட்டு நோய் பரவும் நிலை ஏற்படுவதாகவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மாநகரசபை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கேட்கின்றனர். (37)

# வாகன வரி அதிகரிப்பிற்கு வரிப்பண அதிகரிப்பு காரணமாம் - ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப்பகுதிக்குள் நிறுத்தப்படும் வாகனங்களிடம் பெற்றுக் கொள்ளும் வரியில் திடீரென வருமானத்தில் உயர்வுகண்டுள்ளது.

யாழ். மாநகர பகுதியில்கடந்த காலத்திலும்பாக்க தற்போது நிலமை சீரடைந்துள்ளதால் வாகனங்களின் பாவனைஅதிகரித்துள்ளது.

அத்துடன் வீதிஒழுங்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட படியால் வாகனங்கள் நிறுத்தி வைப்பது சீராக்கப்பட்டுள்ளது இவற்றுடன் தற்போது வரிவிகிதமும் அதிகரிக்கப் பட்டுள்ளது என்று யாழ் மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (லோ)

## நகரசபை வவுனியா
## கேள்வி விளம்பரம்
### நவீன சந்தைக்கட்டட மீளமைப்புக்கான வேலை, கட்டம் 1, 11

மேற்படி விடயம் சம்பந்தமான 25-4-90 ஆம் திகதிய கேள்வி விளம்பரம் தொடர்பான முடிவு திகதிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு பின்போடப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கும் திகதி: 11-06-90 ந. ப. 12-00
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 14-06-90 பி. ப. 2-00

செயலாளர்
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்.
(Ь/982)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
| --- | --- |
| 13 - 10 - 1972 | 18 - 02 - 1990 |

### இளவேங்கை
### செல்வன் சித்திரவடிவேலு கெங்காதரன்
(ஜெயதாஸ்)

எங்கள் இளையவன் நீ
மண்ணின் மக்களின்
வாழ்வின் உதயத்திற்காய்
அஸ்தமனமாகி எம்மைப்
பிரிந்தும் பிரியாது
நிற்கின்றாய் உனக்கு
எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்

20. 05. 1990 ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமை அவரின் ஆத்ம சாந்திக்காய் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

சாத்தியத் தோட்டம்
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

பொ. சித்திரவடிவேலு
குடும்பத்தினர்

(R/492)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட

# அரச ஆஸ்பத்திரிகளுக்கு பிரிட்டிஷ் அரசின் உதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை வழங்கப்போவதாக பிரிட்டிஷ் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த உபகரணங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்துசேரும்.

குறிப்பாக இம்மாவட்டங்களில் அண்மைக்கால நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்கு இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள பன்னிரண்டு உணவுக் களஞ்சியங்களும் ஒரு கோடியே நாற்பத்தாறு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்

# மாவட்ட கல்விப்பணிப்பாளர் பிரதேசப்பணிப்பாளராகஉயர்வு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசத்தின் கல்விப் பணிப்பாளராக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தாலிங்கம் அவர்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய கல்விப் பிரிவுகளை இயைவுபடுத்துமுகமாகவே இப்பதவி வழங்கப்படுகிறது.

இந்நியமனம் இம் மாதம் 14ஆம் திகதியில் இருந்து வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சற்குணராஜாவினால் வழங்கப்பட்டுள்ளது. திரு. சுந்தரலிங்கம் யாழ் கல்விப்பணிப்பாளராகவும் தொடர்ந்து கடமையாற்றுவார்.

அண்மையிலேயே இவர் யாழ். கல்விப்பணிப்பாளராக திரும்பவும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இவர் பதவி ஏற்ற பின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதாகவும், இப்பதவியுயர்வால் யாழ். கல்வித்திணைக்களம் பெருமையுறுவதாகவும் மேற்படி திணைக்கள மேலதிகாரிகள் தெரிவித்தனர். (மு)

# போதனாசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் முறைசாராக் கல்வியை போதித்து வரும் சகல துறைகளைச் சேர்ந்த போதனாசிரியர்களுக்குமான சேவைக்காலப்பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 20,21,22-ஆம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு முடிவடையும் இதில் முறைசாராக் கல்விப் போதனைகள் பற்றியும் கற்கை நெறிகளை நடைமுறைப்படுத்தல், இன்னும் பல விடயங்கள் பற்றி அறிவுறுத்தப்படும்.

இவ்வகுப்புகளில் சகல போதனாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு முறைசாராக்கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (மு)

# வடக்கு,கிழக்குகழகங்களின் உதைபந்தாட்டப் போட்டி

(விசேடநிருபர்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்பாக வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையில் பாசப் பிணைப்பைஏற்படுத்தும் புரிந்துணர்வுடன் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் மாபெரும் உதை பந்தாட்டப் போட்டிகளை நடத்த ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

இம் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் விளையாட்டரங்கில் மட்டுநகர் பாடும் மீன் அணிகள் ஏ.பியுடன் குருநகர் பாடும்மீன் ஏ. பி. அணிகள் விளையாட இருக்கின்றன.

யாழ்-மாநகர சபை ஆணையாளர் திரு.வி.பி. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (21)

# சர்வதேச தரத்தை உயர்த்த அபிவிருத்திச்சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டுஒக்ரோபர் மாதம் சயனைட் அருந்தி வீர மரணம் அடைந்த பன்னிரெண்டு போராளிகளின் நினைவுஸ்தூபி அமைந்துள்ள தீருவில் பூங்கா சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படஉள்ளது. இதற்கான திட்டம் வடமராட்சிப் பகுதி திட்டமிட்ட நகர அபிவிருத்தியுடன் இணைக்கப் பட்டு அடிப்படை வேலைகள் ஆரம்பமாக உள்ளன.

எதிர் காலத்தில் இப் பூங்கா எவ்வாறு அமைய வேண்டும்? அதனுடைய வடிவமைப்பு என்ன? என்பது பற்றி நகர திட்டமிடல் வல்லுனர்கள் வடிவமைத்து வருகின்றனர். (லோ)

### பிரசித்தி பெற்ற சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின்வருடாந்த மகோற்சவ உற்சவங்கள்

எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து பதினெட்டுத்தினங்கள் திருவிழா நடைபெற்று யூன் மாதம் 7ஆம் திகதி மாலை 2 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 8ஆம் திகதி காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(B/980)

## உதவித் தாதியர் பயிற்சி நெறி
## TRAINING FOR NURSES AIDE

### இன்று ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால [illegible] செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B.694)

எங்கள் இளையவன் நீ
மண்ணின் மக்களின்
வாழ்வின் உதயத்திற்காய்
அஸ்தமனமாகி எம்மைப்
பிரிந்தும் பிரியாது
நிற்கின்றாய் உனக்கு
எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்

20 05. 1990 ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமை அவரின் ஆத்ம சாந்திக்காய் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக் கொளகிறோம்.

சாத்தியத் தோட்டம்
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

பொ. சித்திரவடிவேலு
குடும்பத்தினர்

(R/492)

## வடக்கு,கிழக்குகழகங்களின் உதைபந்தாட்டப் போட்டி

(விசேடநிருபர்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்பாக வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையில் பாசப் பிணைப்பைஏற்படுத்தும் புரிந்துணர்வுடன் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் மாபெரும் உதை பந்தாட்டப் போட்டிகளை நடத்த ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

இம் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3 மணிக்கு குருநகர் விளையாட்டரங்கில் மட்டுநகர் பாடும் மீன் அணிகள் ஏ.பியுடன் குருநகர் பாடும்மீன் ஏ. பி. அணிகள் விளையாட இருக்கின்றன.

யாழ்-மாநகர சபை ஆணையாளர் திரு.வி.பி. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (21)


உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

# சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B.694)



# உங்கள் வீட்டு வேலை, தளபாட வேலைகளுக்கு தேவையான

* மர அரிவு வேலைகள், * உள்ளூர் மரங்கள், * தீராந்திகள், * பலகை,
* றீப்பை வகைகளும், விறகு - புறவெட்டுக்கள் தேவைக்கேற்றபடியும் விற்பனைக்குண்டு.

## வீட்டுத் தளபாடங்கள்

கதிரை, கட்டில், கபேட், அலுமாரிகள், செற்றிகள் ஓடர்களுக்கு செய்து கொடுப்போம்.

## உங்கள் திருப்தி...! எங்கள் மகிழ்ச்சி...!!

விபரங்களுக்கு:

# எஸ். ரீ. வை. அரிவு ஆலை

கூழாவடி, மானிப்பாய்.

(B-952)

## சிந்தனைக்கு

பழகிப்போன பழைய பாதையில்
நடப்பவர்கள் புதுப்பாதையைக்
காட்டுபவர்கள் மீது கல்லெடுத்து
வீசுகின்றனர் பாழாய்ப்
போன நம் இனம் படைக்கப்பட்டது
அப்படித்தான்

-வால்ட்டேயா

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 19-05-90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05

# "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத" கதை

"எல்லாரும் ஏறிக்களைத்த குதிரையில் சக்கிடுத்தார் ஏறிச்சறுக்கி விழுந்தாராம்" என்பது ஒரு தமிழ்ப் பழமொழி.

தமிழ்ப் போராளிக் குழுக்களை ஒற்றுமைப்படுத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஆனானப்பட்ட கலைஞர் கருணாநிதி எடுத்த முயற்சி பத்தொன்பது அம்சக்கோரிக்கையைக் கண்டு அதிர்ச்சியடைந்ததுடன் கை விடப்பட்டது.

முட்டுக் கட்டையாக முளைத்த பத்தொன்பது அம்சக் கோரிக்கையை இப்போது தூக்கிவைத்துக் கொண்டு தமிழ்க் குழுக்களை ஒற்றுமைப் படுத்தப் போவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் பிரேமதாசா அரசும் பல்லவி ஆரம்பித்திருப்பது தமிழ் மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவது நியாயம்.

ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே மறந்து அதே ஆயுதங்களைக் கொண்டு தமிழ் மக்களையே கொலை செய்து கொள்ளையடித்து புழுக்களாக நாட்டை விட்டே ஓடித்தப்பிய குழுக்களுக்குப் புத்துயிர் கொடுத்து தனது நலனைப் பாதுகாத்துக் கொள்ள முயன்ற இந்திய வல்லரசே இதில் தோல்வி கண்ட பின்னர் இப்போது சக்கிடுத்தார் குதிரையிலேறியது போல பிரேமதாசா அரசு முன்வந்திருக்கிறது.

பிரேமதாசா அரசு இப்போது ஒற்றுமைப்படுத்த முன்வந்திருக்கும் தமிழ்ப் போராளிக் குழுக்கள் எங்கே இருக்கின்றன?

தமிழ் மண்ணில் இந்தக் குழுக்களில் ஒன்றாவது இருக்கின்றதா? தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு இந்தக் குழுக்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? இந்தக் குழுக்களைப் பற்றித் தமிழ் மக்கள் சிறிதளவாவது கவலைப்படுகின்றார்களா?

1983, 84 ஆம் ஆண்டுகளில் காளான் முளைத்தது போல் முளைத்த இயக்கங்கள் தமிழ் நாட்டில் முப்பத்தாறு இருந்தன.

அப்பொழுது இந்தியா மனப்பூர்வமாகவே ஈழத்தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிந்தையில் கொண்டிருந்தால் இவற்றை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்திருக்கலாம்.

ஈழத்தமிழ் மக்கள் ஒரே அமைப்பின் கீழ் ஒற்றுமைப்பட்டால் தமது பிடியிலிருந்து விலகிவிடும் என்றும் இதனால் தனது நலன் பாதிக்கப்பட்டுவிடும் என்றும் அஞ்சிய இந்தியா பல்வேறு குழுக்களையும் வளர்த்து விட்டது.

இந்தக் குழுக்களில் பலவும் மக்களின் நலனை

# திருமலைத் துறைமுகமே இந்தியப்படை வரக் காரணம்

மண்டபத்துக்கும் நாகபட்டினத்துக்குமிடையிலான கரையோரப் பகுதிகளை ரோந்து பார்ப்பதற்காக பராத் துருப்புகளை அனுப்புவதென்ற மத்திய அரசாங்கத்தின் முடிவினைத் தொடர்ந்து தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்திய அமைதி காக்கும் படையின் இலங்கை தொடர்பான இன்றைய நிலைப்பாடு பற்றித் திட்டவட்டமான கொள்கையாக்கம் அவசியமாகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் செல்வாக்கிலிருந்து இப்பிராந்தியத்தை விடுவிப்பதற்கான வகையில் துருப்புகள் காவலுலாவுதலை தமிழ் நாட்டு அரசு எதிர்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தியாவில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தொடர்பாக முன்னாள் அண்ணா தி. மு. க அரசு கண்மூடி மௌனியா இருந்ததால் அந்நிலையை விடுதலைப்புலிகள் தமக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டனர்.

1987 ஜூலையில் இந்திய அமைதி காக்கும்படை ஸ்ரீலங்காவில் தலையிட்டபிறகு இராணுவ தலைமைச் செயலகமும் இ.அ.கா. படைப்பிரிவும் விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டுக் கடற்கரையோரங்களை ஸ்ரீலங்காவில் போர்ப் பிராந்தியத்துக்கு ஆயுதங்களை அனுப்புவதற்காகப் பாவிக்கின்றது என்பது பற்றி மத்திய தமிழ் நாட்டு அரசாங்கங்களுக்குப் புகார் செய்துள்ளன. விடுதலைப் புலிகள் அணியினைச் சேர்ந்தவர்கள் தம்மை மீளப் பலப்படுத்திக் கொள்ளவும், ஓய்வினைப் பெறவும் தமிழ் நாட்டுக் கரையோரங்களை புகலிடமாகப் பாவித்து வருவதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்திய இராணுவ, அதிகாரிகளால் தனிப்பட்ட முறையில் பத்திரிகையாளர்களுக்கு முறைப்பாடு செய்துள்ள செய்திகள் எம்மைத் திடுக்கிட வைக்கின்றன. இந்திய இராணுவம் புலிகளை அழிக்க முற்பட்டிருந்த சமயம் புலிகள் இந்திய மண்ணில் புகலிடம் தேடியுள்ளனர். யாழ்ப்பாணத் தீவகற்பத்தை இந்திய அமைதி காக்கும் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்த சமயம் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கி ஓடிமறையும் தந்திரோபாயத்தைக் கையாண்டனர். அவர்களை இலகுவில் கண்டுகொள்ள முடியாமலும் இருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மாத்திரம் இந்திய எல்லைகளை மீறி உட்பிரவேசித்தார்கள் என்பதல்ல. வேறு போராளிக் குழுக்களும் தமிழ் நாட்டைப் புகலிடமாகப் பாவித்து வந்துள்ளார்கள். ஓரிரு மாதங்களுக்கு முன் தமிழ் நாட்டில் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும், இராணுவ உபகரணங்களையும் காவற்துறையினர் மீட்டுள்ளனர்.

### இந்திய தலையீட்டுக்கான காரணங்கள்

1987 மே-ஜூலையில் இந்திய இராணுவம் இலங்கையில் தலையிடுவதற்கான வகையில் கொள்கை வகுத்தவர்கள், கொள்கை வகுத்ததற்கான முழுக் காரணங்களை இப்போதைக்கு வெளி

இணைத்துப் பார்க்கலாம். 1986 கடைசிப் பகுதியில் வடபகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஜே.ஆர்.க்கு எதிரான ஒரு சதி மேற்கொள்ளப் பட்டு வருகின்றது என்ற செய்தி இ.அ. காக்கும் படையை உடன் இலங்கையில் தலையிட வைப்பதற்கான காரணமாய் அமைந்தது எனலாம்.

1987 மே மாதமளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடமராட்சி முற்றுகை ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை சரியாக நடைபெறுவது போன்ற தோற்றத்தைத் தந்தது. வடமராட்சியின் வீழ்ச்சி இந்தியாவில் ஒரு கிலேசத்தை ஏற்படுத்தியது. இந்நிலையிலிருந்து மீட்க இராணுவ நடவடிக்கையில் இறங்குமாறு தமிழ் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. விடுதலைப்புலிகளின் பிரச்சாரமும் இதற்கான காரணமாகும்.

**மனோஜ் ஜோஷி**

அத்தோடு ஸ்ரீலங்கா நிலையை அவதானித்து வந்த வெளிவிவகார அமைச்சும் றோ ஸ்தாபனமும் மேற்கொண்ட பகுப்பாய்வு ஸ்ரீலங்காவில் இந்தியா தலையிடுவதற்கான பின்னணியைத் தந்தது.

### தவறான கணிப்பீடுகள்

ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தை நான்கு ஐந்து நாட்களுக்கிடையில் கைப்பற்றும் என்று றோ கணிப்பிட்டிருந்தது.

றோவின் இந்த முடிவினால் யாழ். நகரை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்க சுமார் மூன்று படைப் பிரிவுகளை அனுப்பி ஒரு மாதமளவில் கடும் சண்டையில் மாட்டிக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. 200 பேர்வரை உயிரிழந்தார்கள்.

ஸ்ரீலங்கா பற்றிய றோவின் கணிப்பீடுகள் இவ் விஷயத்தில் தவறிவிட்டது.

மற்றும்படி இலங்கைத் தமிழர் விஷயத்தில் இந்தியா தலையிடா[illegible] போனால் ஸ்ரீலங்காவில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களின் விளைவாகத் தமிழ்நாடு முழுவதுமே

ஆகவே, இப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இரண்டு படைப் பிரிவுகளைச் ஸ்ரீலங்காவுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது என்று தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழம் அமைப்பது இந்திய தேசிய நலன்களுக்கு மாறானது என்பது இந்தியக் கொள்கையாக்கத்தின் முக்கிய கருத்தாகும். (தமிழீழக் கோரிக்கை தமிழ் நாட்டையும் பாதிக்கும்) எனவே, 'தமிழ்ப் பிரச்சினையே' இந்தியாவின் தேசிய எல்லைகளுக்

(6ஆம் பக்கம் பார்க்க)



## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

குண்டு வீச்சானது பல்வேறு வகைப்பட்ட கருவிகளால் நடத்தப்படினும், ஆகாய விமானங்களின் மூலம் போடப்படும் குண்டுகளே அளவில் பெரியவையாகவும், ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது கூடியளவு தாக்கத்தை அளிக்கக்கூடியனவாகவும் உள்ளன. எனவே இவற்றுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே நீங்கள் கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும். பொதுவாக கவச வாகனங்களில் அமைக்கப்பட்டுள்ள பீரங்கிகளானவை ஒரு வீட்டை முற்றாகத் தகர்ப்பதற்குரிய வலிமை வாய்ந்தவை அல்ல. இவற்றினால் உறுதியான சுவரொன்றில் ஒரு பெரிய துவாரமொன்றையே இடமுடியும்.

# ஊர்சுற்றி

எழுதுவது

'கொண்டா' 'யமஹா' 'மிட்சுபிஷி' என்று சகல பொருட்களும் ஜப்பானிலிருந்து இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நன்கொடை என்றும் உதவி என்றும் கடன் என்றும் ஜப்பான் இலங்கைக்குப் பெருமளவில் தந்து உதவுகிறது.

ஜப்பான் பிரதமரும் அவரது மனைவியும் சமீபத்தில் கொழும்புக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு வந்து திரும்பினார்கள். அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது மேலும் உதவி கிடைக்க வேண்டுமென்பது இலங்கைஅரசின்பிரார்த்தனை!

இப்படியெல்லாம் ஜப்பானிலிருந்து உதவிகளை இறக்குமதி செய்து கொண்டிருக்கையில் இங்கிருந்து ஜப்பானுக்குச் சென்ற இலங்கை பிக்கு ஒருவர் ஜப்பானில் பின்பற்றப்படும் மகாயான பௌத்தத்தைத் தழுவிக் கொண்டாரென்று இலங்கையில் சில பிக்குகள் அட்டகாசம்!

பிக்குகள் சங்கத்திலிருந்தே (சங்கசபா) பெல்பொலவிபுலசார தேரோ என்ற அந்தப் பிக்குவை நீக்கிவிட்டார்கள்.

அந்தப்பிக்குகொழும்பு திரும்பியதும் வரவேற்பளிக்கக்கூடாது என்று பிக்குகள் தீர்மானம். இதை பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி பிரேமதாசாவும் ஆதரித்தார்.

அந்த விபுலசார தேரோ சளைத்தவரல்ல.

ஏழைகளுக்குத் தொண்டு செய்யவே

தமிழ் மண்ணில் இந்தக் குழுக்களில் ஒன்றாவது இருக்கின்றதா? தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு இந்தக் குழுக்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? இந்தக் குழுக்களைப் பற்றித் தமிழ் மக்கள் சிறிதளவாவது கவலைப்படுகின்றார்களா?

1983, 84 ஆம் ஆண்டுகளில் காளான் முளைத்தது போல் முளைத்த இயக்கங்கள் தமிழ் நாட்டில் முப்பத்தாறு இருந்தன.

அப்பொழுது இந்தியா மனப்பூர்வமாகவே ஈழத்தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிந்தையில் கொண்டிருந்தால் இவற்றை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்திருக்கலாம்.

ஈழத்தமிழ் மக்கள் ஒரே அமைப்பின் கீழ் ஒற்றுமைப்பட்டால் தமது பிடியிலிருந்து விலகிவிடும் என்றும் இதனால் தனது நலன் பாதிக்கப்பட்டுவிடும் என்றும் அஞ்சிய இந்தியா பல்வேறு குழுக்களையும் வளர்த்து விட்டது.

இந்தக் குழுக்களில் பலவும் மக்களின் நலனை மறந்து தமது சொந்த நலனையே பெரிதாகக் கருதி தாம்பெற்ற ஆயுதங்களையும் பயிற்சியையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தின. மக்களின் ஆதரவை இழந்தன. பலகுழுக்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. சில குழுக்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பியோடித் தஞ்சம் புகுந்தன.

இக்குழுக்களுக்கு மீண்டும் இந்தியா ஆதரவளித்தது. இக்குழுக்களைத் தனது கைப்பொம்மைகளாக்கிக் கொண்டது.

இந்தியாவின் பிடிக்குள் சிக்கிக்கொள்ள மறுத்து தனது சொந்தக் காலில் நின்றுதான் ஆயுதம் ஏந்திய நோக்கத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து வரும் விடுதலைப் புலிகளை இந்தக் குழுக்களைக் கொண்டே அழித்து விடலாமென இந்தியாவும் அதன் உளவுப் பிரிவான றோவும் கனவுகண்டன.

இதில் தோல்வி கண்ட இந்திய 'றோ'வும் இந்தக் குழுக்களும் இன்னும் ஓய்ந்து விடவில்லை.

பத்தொன்பது அம்சக் கோரிக்கை இப்பொழுது பிரேமதாசா அரசிடம் போயிருக்கிறது. இந்தக் கோரிக்கையை 'றோ' வின் உருவாக்கம் என்பது பகிரங்க இரகசியம்.

இதை வைத்துக் கொண்டு தமிழ்க் குழுக்களுக்குள் ஒற்றுமை யேற்படுத்துவதற்குப் பிரேமதாசா அரசு முயற்சி செய்யப்போகிறதாம்.

இது ''ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத''கதை தான்.

இந்தியப்படையின் பாதுகாப்பில் வந்து, இந்திய இலங்கை அரசுகளின் ஆசீர்வாதத்துடன் வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஆட்சி பீடத்திலமர்ந்து இந்திய இலங்கை அரசுகளின் நிதி உதவியும் சகல சலுகைகளும் பெற்றும் மக்களைத் துன்புறுத்தி கொலைசெய்து, கொள்ளையடித்து இந்தியப்படையின் பாதுகாப்புடனேயே தப்பியோடிய குழுக்களை ''ஒற்றுமை''ப் படுத்தி இங்கு கொண்டு வரவேண்டுமென்று யார் பிரேமதாசா அரசைக் கேட்டார்கள்?

இந்திய வல்லரசே தோல்வி கண்ட இந்த முயற்சியை பிரேமதாசா அரசு கைவிட்டு அடுத்து மேற்கொள்ள வேண்டியவற்றை அவசரமாகச் செய்து முடிக்க வேண்டியதுதான் இன்றுள்ள அதன் கடமை.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும். வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்துத் தேர்தல் நடத்த வேண்டும்.

இதன்பின் தமிழ் மக்கள் எந்த ஒற்றுமையை விரும்புகிறார்களென்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்வார்கள்.

இதற்குமுன் பிரேமதாசா அரசு தமிழ்க் குழுக்களை ஒற்றுமைப் படுத்தப் போவதாகக் கூறுவது தமிழ் மக்களை மீண்டும் அழித்து ஒழிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியேயாகும்.

தமிழ் மக்களின் பாதுகாப்பு, ஒற்றுமை, சட்டம் ஒழுங்கு இவற்றை அவர்களே பார்த்துக் கொள்வார்கள்; அரசு கவலைப்படத் தேவையில்லை!

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

குண்டு வீச்சானது பல்வேறு வகைப்பட்ட கருவிகளால் நடத்தப்படினும், ஆகாய விமானங்களின் மூலம் போடப்படும் குண்டுகளே அளவில் பெரியவையாகவும், ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது கூடியளவு தாக்கத்தை அளிக்கக்கூடியனவாகவும் உள்ளன. எனவே இவற்றுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே நீங்கள் கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும். பொதுவாக கவச வாகனங்களில் அமைக்கப்பட்டுள்ள பீரங்கிகளானவை ஒரு வீட்டை முற்றாகத் தகர்ப்பதற்குரிய வலிமை வாய்ந்தவை அல்ல. இவற்றினால் உறுதியான சுவரொன்றில் ஒரு பெரிய துவாரமொன்றையே இடமுடியும்.

ஆகாய விமானத் தாக்குதலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை? இக்கேள்விக்கான பதிலானது தரப்படு முன்னர் உங்கள் மனதில் நீங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் விமானத் தாக்குதலைப் பற்றிய மோசமான, பாரதூரமான கற்பனைகளை அகற்றிவிடுங்கள். ஏனெனில் ஆகாய விமானமானது உங்கள் மனவுறுதிக்கெதிரான ஆயுதமேயாகும். வெறுமனே பயங்கர சத்தத்தை எழுப்பிக் கொண்டு, தாழ்வாகப் பறந்து வந்து தாக்குவது மக்களிடையே பீதியையும், குழப்பத்தையும், உண்டுபண்ண வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்தினாலேயாகும். அவர்கள் எதிர்பார்த்தபடி நீங்கள் சிதறி ஓடுவீர்களேயாயின் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள். ஆனால் உறுதியான மன வலிமையுடன் எந்தவொரு தாக்குதலுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய ரீதியில் திட்டமிட்டு செயலாற்றுவீர்களேயாயின், குண்டு வீச்சுகளினால் பெருமளவு உயிர்ச்சேதம் எதனையும் ஏற்படுத்த முடியாது.

ஜேர்மனியர்கள் லண்டன் நகரின் மீது 1 ஆம் உலகப்போரின் போது நிகழ்த்திய குண்டு வீச்சுத் தாக்குதலின்போது வீசப்பட்ட 128 குண்டுகளினால் 162 பேரை மட்டுமே கொல்லகூடியதாக இருந்தது. இதன்போது 432 பேர் காயமுற்றனர். வேறொரு சம்பவத்தின் போது 528 குண்டுகள் போடப்பட்ட இடத்தில் 916 இழப்புகளும், 2500 பேர் காயமுறவும் காணப்பட்டது. மேற்கூறிய சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட விமானங்களானவை அநேகமாக 1 தொன் எடையுள்ள குண்டுகளை காவிச்சென்று வீசக்கூடியனவாய் இருந்தன. ஆனால் ஸ்ரீலங்கா அரச படையினரிடம் இதுவரை இரண்டு 551 இறாத்தல் (250 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு சென்று வீசக்கூடிய 5 விமானங்களும், தற்பொழுது இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டு 276 இறாத்தல் (125 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு செல்லக்கூடிய 6 விமானங்களும் மாத்திரமே உண்டு.

விமானங்கள் குண்டுவீசும்போது கண்டபடி ஓடுவது எந்தவித பலனையும் அளிக்கப் போவதில்லை. எந்தவொரு குண்டு வீச்சின் போதும் நேரடியாக குண்டு விழும் இடத்தில் ஏற்படும் உயிரிழப்பைவிடவும். குண்டு வெடிப்பின் போது உருவாக்கப்படும் சிதறு துண்டுகளே பெருமளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்றன. விமானங்கள் குண்டு வீசவரும் போது ஒரு போதும் ஒரு கூட்டமாக நின்று மேலே அண்ணாந்து பார்க்காதீர்கள். இயலுமான வரை நன்கு தூரத் தூர விலகி உங்கள் முகங்களை விமானத்திற்கு காட்டாதவாறு இருங்கள் ஏனெனில் மனித முகமொன்றானது மேலிருந்து பார்க்கும் பொழுது வேறென்றையும்விட இலகுவில் தெரியக்கூடியதாகும். உங்கள் முகங்கள் தெரியாவிடின் உங்களை விமான ஓட்டிகள் காணும் வாய்ப்பு குறைகின்றது. தற்செயலாய் கண்டு கொண்டாலும் உங்களை நேரடியாக தாக்கும் வண்ணம் குண்டு வீசுவது கடினமாகும் எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் யாதாயினும் மறைப்புகளினுள் சென்று வீடுவதே பாதுகாப்பானதாகும்.

ஓரிரு மாதங்களுக்கு முன் தமிழ் நாட்டில் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும், இராணுவ உபகரணங்களையும் காவற்துறையினர் மீட்டுள்ளனர்.

## இந்திய தலையீட்டுக்கான காரணங்கள்

1987 மே-ஜூலையில் இந்திய இராணுவம் இலங்கையில் தலையிடுவதற்கான வகையில் கொள்கை வகுத்தவர்கள், கொள்கை வகுத்ததற்கான முழுக் காரணங்களை இப்போதைக்கு வெளியிடப் போவதில்லை. இருந்தாலும் இதற்கான பின்னணிக் காரணங்கள் சிலவற்றை றோவின் இந்த முடிவினால் யாழ். நகரை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்க சுமார் மூன்று படைப் பிரிவுகளை அனுப்பி ஒரு மாதமளவில் கடும் சண்டையில் மாட்டிக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. 200 பேர்வரை உயிரிழந்தார்கள்.

ஸ்ரீலங்கா பற்றிய றோவின் கணிப்பீடுகள் இவ் விஷயத்தில் தவறிவிட்டது.

மற்றும்படி இலங்கைத் தமிழர் விஷயத்தில் இந்தியா தலையிடா[illegible] போனால் ஸ்ரீ லங்காவில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களின் விளைவாகத் தமிழ்நாடு முழுவதுமே தீச்சுவாலையாகி விடும் என்ற கருத்தும் அரசாங்கத்தின் முன் வைக்கப்பட்டது.

# நிவாரணத்துக்குஎன்ன நடந்தது

ஆசிரியர்,
'ஈழநாதம்'

மீளக்குடியமர்தல் நிவாரணம் பெரும்பாலும் சகல பிரிவுகளிலும் கொடுப்பனவு முடிந்து தற்போது சிறு தொழில் ஊக்குவிப்புப் பணம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் ஒரு சில பிரிவுகளில் குறிப்பாக வண்வடமேற்கில் சிலருக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் முற்றாகவே கொடுபடவில்லை. விண்ணப்பம் சரிவரச் சமர்ப்பித்தவர் எவரும் பாகுபாடின்றி இதைப் பெறவேண்டியவர்கள். இதில் சிலரைத் தவிர்க்க வேண்டியதற்குக் காரணம் எதுவும் இருக்க முடியாது. செயலற்றுக் கிடந்த உப அதிபர் காரியாலயங்கள் இயங்க ஆரம்பமாவதற்கு முன்னோடியாக இருந்தது இந்த ஒரே ஒரு வேலைதான். இதைத்தானும் சரிவரச் செய்து முடிக்காவிட்டால் மக்கள் இவர்களிடம் எதை எதிர்பார்க்கலாம். யாழ்.நகர வட்டாரம், முஸ்லிம் வட்டாரம் எல்லாம் சரிவரக் கொடுப்பனவு கொடுக்கப்பட்டிருக்க வண்வடமேற்கில் கொடுபடாததற்குக் காரணம் என்ன? இப்படி இருக்கக் காரணம் எதுவும் இல்லாது ஒரு சிலருக்குக் கொடுப்பனவு முற்றாகக் கொடுபடாதிருப்பதற்கு எவராவது தகுந்த விளக்கம் கொடுக்கிறார்கள் இல்லை. இது சம்பந்தமாக சென்றவருடம் முதல் கொடுப்பனவு ஆரம்பமான காலம் தொடக்கம் பட்டியல்களில் எனது பெயர் இடம்பெறாததால் கிராமசேவகரிடம் விசாரித்தபோது இவர் உ. அ. அ. பணிமனையில் விசாரிக்கும்படியும், அங்கு சென்றால் அ. அ. பணிமனை அல்லது கிராமசேவகரிடம் பார்க்கும்படியும் பல சாக்குப் போக்குகளைக் கூறினார்கள்.

இதுவிடயமாக 17-3-89இல் நல்லூர் உ. அ. அ. ஊடாக அரசாங்க அதிபருக்கும் 25 – 4 – 89 இல் அரசாங்க அதிபருக்குத் தபால் மூலமாகவும் 7 - 10 - 89இல் மீண்டும் நல்லூர் உப அரசாங்க அதிபருக்குத் தபால் மூலமாகவும் நேர்முகமாகவும் சகல விபரங்களையும் எடுத்துக்காட்டி

## மக்கள் மடல்

எனது முறைப்பாட்டைச் சமர்ப்பித்தேன். இதுவரை ஒரு வரி பதிலும் இல்லை. எனது அயலிலேயே என் போன்று பாதிக்கப்பட்டவர் பலர் இருக்கிறார்கள். நடந்தது தவறு அல்ல என்பதை எடுத்துக்காட்ட அரசாங்க அதிபரோ அல்லது வேறு சம்பந்தப்பட்ட எவராவது விசாரணை மேற்கொள்ளுவாராயின் இதற்குரிய காரணகர்த்தா யார் யார் என்பதை இதுவரை நான் சமர்ப்பித்த முறைப்பாடுகளையும், எனக்கு அலுவலகங்களில் ஏற்பட்ட அனுபவங்கள், தகவல்கள் இன்னும் இதுசார்ந்த விபரங்கள்மூலம் எடுத்துக்காட்ட முடியும். காலம் கடந்துவிட்டதாயினும் பாதிக்கப்பட்ட மக்கள் அறியும்வண்ணம் இக்கொடுப்பனவு கொடுக்கப்படாததற்குரிய காரணங்களை எவராவது வெளியிடுவார்களா? என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் அறியத்தருவார்களா?

- நா. உருத்திரபசுபதி
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிக்குகள் சங்கத்திலிருந்தே (சங்கசபா) பெல்பொலவிபுலசார தேரோ என்ற அந்தப் பிக்குவை நீக்கிவிட்டார்கள்.

அந்தப்பிக்குகொழும்பு திரும்பியதும் வரவேற்பளிக்கக்கூடாது என்று பிக்குகள் தீர்மானம். இதை பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி பிரேமதாசாவும் ஆதரித்தார்.

அந்த விபுலசார தேரோ சளைத்தவரல்ல.

ஏழைகளுக்குத் தொண்டு செய்யவே நான் மகாயான பௌத்தத்தைத் தழுவினேன் என்றார். இலங்கையில் தேரவாத பௌத்தமே பின்பற்றப்பட்டாலும் இங்கு ஏற்கனவே மகாயான பௌத்தத்தைத் தழுவிக் கொண்டவர்கள் இருக்கிறார்களென்றும் அவர் கூறினார். இது மட்டுமல்ல தனக்குள்ள அடிப்படை ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டால் பௌத்த மதத்தைத் துறந்து இலங்கையில் பின்பற்றப்படும் வேறொரு மதத்தைத் தழுவிக் கொள்ளத் தமக்கு உரிமை இருக்கிறதென்றும் அவர் மிரட்டினார்.

இப்பொழுதுமகாயான பௌத்தத்துக்கும் தேரவாத பௌத்தத்துக்கும் வேற்றுமை அதிகமில்லையென்பதும் இரு பிரிவுக்குமிடையில் ஒற்றுமை யேற்படுத்த வேண்டிய தன் அவசியத்தைப் பற்றியும் பிரசாரம் நடைபெறுகிறது.

இது மட்டுமல்ல பிக்கு விபுலசார தேரோவை ஒதுக்கி வைத்துவிட்டால் ஜப்பானில் பிக்குகள் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டால் என்ன செய்வது? இது பூதாகாரமாகி ஜப்பான் இலங்கைக்கு அளிக்கும் உதவிகளை நிறுத்தி விட்டால் என்ன செய்வது? இப்போதுதான் இந்தக் கவலை தலையெடுத்திருக்கிறது.

அதுசரி ஜப்பானிலிருந்து சகல பொருள்களையும் இறக்குமதி செய்யும் போது மகாயான பௌத்தத்தையும் இறக்குமதி செய்வதால் என்ன முழுகிப்போகும்.

★

Registered as a Nes Paper at the G. P. O.

ஈழநாதம்

# 'லண்டன்ரைம்ஸ்' சஞ்சிகைக்கும் சுதந்திரக்கட்சிக்கும் தொடர்பா?

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. மகிந்தராஜபக்ஸா கடந்த மார்ச்சில் வெளிநாடு பயணமாகும் போது கொண்டு சென்ற மூன்று கடிதங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பகுதியினர் பறிமுதல் செய்தது. மனித உரிமைகளை மீறும் செயலாகும். இதனை விசாரிக்க வேண்டும்என்றுபதில் எதிர்கட்சித்தலைவர் அனுராபண்டாரநாயக்க பாரளுமன்றத்தில் நேற்று உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வந்தார்.

சபை முதல்வரும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா இதற்குப் பதிலளித்து பேசுகையில் சுதந்திரக் கட்சி எம். பி. மகிந்தராஜபக்ஸா லண்டனில் உள்ள தமிழ் டைம் சஞ்சிகை ஆசிரியர் ராஜநாயகத்துக்கும், லண்டன் மனித உரிமைகள் சங்க சமூகசேவையாளர் பெர்ணாண்டோவுக்கும் மூன்று கடிதங்களைக் கொண்டு சென்றார். இதில் மனித உரிமைகள் மீறல்எதுவும் இடம் பெறவில்லை.

லண்டன் டைம் சஞ்சிகை ஆசிரியர் ராஜநாயகத்துக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையே உள்ள தொடர்பை எண்ண ஆச்சரியமாகவுள்ளது. இவர்களின் நட்பும் உறவுமே இந்தக் கடிதப் போக்குவரத்து என்றும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவர்களின் புகார் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் பதிலளித்தார்.

## வீடமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு ஒன்றிணைந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு பணிகள்பலபாதிக்கப்பட்ட கிராமங்களில் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை என புகார்கள் கிடைத்துள்ளது

கொம்மாதுறை, புல்லுமலை, கோப்பாவெளி' மரபபாலம், திகிலிவட்டை, சித்தாண்டி மாவடிவேம்பு, வந்தாறுமூலை கிரான், சந்திவெளி, போன்ற கிராமங்கள் தான் இம்மாவட்டத்தில் அடிக்கடி படையினரின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டன

இக் கிராமங்களில் பல வீடுகள் எரிக்கப்பட்டுமுள்ளன இந்நிலையில் பாதிக்கப்பட்ட இக் கிராமங்கள் முன்னுரிமை பெறாத நிலை குறித்து கிராமவாசிகள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்




அன்னை பூபதிநகர் சமீபத்தில் மட்டக்களப்பில் திருமதி பூபதியின் கணவர் திரு.கணபதிப்பிள்ளையினால் நாடா வெட்டித்திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்டபடம்.

## பயிற்சிப் பட்டதாரிகளை இடமாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பயிற்சிப் பட்டதாரி ஆசிரியர்கள்அனைவரும் வெளிமாவட்டங்களிற்கு உடனடியாக இடமாற்றப்படவுள்ளார்கள். இதற்கான நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் 95 பயிற்சிப் பட்டதாரிகள் ஆசிரிய சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கான இடமாற்ற உத்தரவு மாகாண கல்வி அமைச்சினால் யாழ். கல்வித்திணைக்களத்தினூடாக விரைவில் அனுப்பி வைக்கப்படும். (மு)

## மாலைதீவு - ஸ்ரீலங்கா பேச்சுவார்த்தை விரைவில்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் முற்பகுதியில் பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா இந்தியா சென்றிருந்தார்.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங் சார்க் மகாநாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் சார்க் மகாநாடு தொடர்பான பிரச்சினையை ஸ்ரீலங்காவும், மாலைதீவும் தான் முடிவெடுக்க வேண்டும் என்றார் எந்த முடிவையும் இந்தியா ஆதரிக்குமென வி. பி. சிங் தெரிவித்தார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா வாராந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் இதைத் தெரிவித்தார். ஸ்ரீலங்காவும், மாலைதீவும் மிக விரைவில் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் என்று ரஞ்சன் தெரிவித்தார்.

## பருத்தித்துறைபிரதேச வர்த்தகர் சங்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் தலைமையில் நடைபெற்றது.

பின் வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு பொ. ரவீந்திரன் உப-தலைவர் திரு.சி. மகேந்திரராசா. செயலாளர். திரு.ஆ. நடராஜா உப-செயலாளர் திரு ஐ.பொன்னம்பலம் பொருளாளர் திரு. தெ. தர்மகுலசிங்கம்.

10 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. (25)

## மாவீரர் கட்டிடநிதிக்காக மாபெரும் நாடகவிழா

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை 7.00 மணிக்கு மாவீரர் கட்டிட நிதிக்காக மாபெரும் நாடகவிழா நடைபெற உள்ளது. நிகழ்ச்சிகளாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப்பிரிவு வழங்கும் 'களத்தில் காத்தான்' என்ற நாடகமும் 'நல்லதைச் செய்வோம்' என்ற வில்லிசை நிகழ்ச்சியும் மறைந்த V. V. வைரமுத்து குழுவினரின் 'பூதத்தம்பி' நாடகமும் இராஜன் இசைக்குழுவின் 'புரட்சிகானங்கள்' இசை நிகழ்ச்சியும் நடைபெவுள்ளன.

பிரவேசக்கட்டணங்கள் ரூபா 10/-, 5/-, 3/- என அறிவிக்கப்பட்டதுடன் இந்நிகழ்ச்சியில் சகல பிரதேச மக்களும் கலந்து கொள்ளும் பொருட்டு மினிபஸ் சங்கத்தினதும் பேருந்துசபையினதும் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறும் எனவும் நிகழ்ச்சி அமைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## கால் இறுதிப் போட்டிகள்

ஜொலிஸ்ரார் நடாத்தும் சப்றா கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியின் கால்இறுதி ஆட்டம் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக் கால்இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணிக்கும் கிராஸ் கொப்பஸ் அணிக்கும் இடையில் காலையிலும், ஜொனியன்ஸ் அணிக்கும் பற்றீசியன்ஸ் அணிக்கும் இடையில் மாலையிலும் போட்டிகள் நடைபெறும்.

## வவுனியா விவசாயக்கல்லூரிக்கு 3 லட்சம் ரூபா ஒதுக்கீடு!

(வவுனியா)

வவுனியாவில் உள்ள விவசாயக் கல்லூரிக்கு மூன்று லட்சம் ரூபாவை வடகிழக்கு மாகாண சபயின் காணி விவசாய அமைச்சு வழங்கியுள்ளது. இத்துடன் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் சமீபத்தில் இக் கல்லூரிக்கு தமது ஆண்டு நிதியிலிருந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 146 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

மேற்படி விவசாயக் கல்லூரியில் உள்ள விடுதிகள பூரணப்படுத்தல், நீர்பற்றாக் குறை [illegible] கொள்முதல் செய்தல் போன்ற தேவைகளுக்குஇப்பணம் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

### சிரமதானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலையடி வெட்டையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

பாலையடிவட்டை பிள்ளையார் ஆலய வீதி சிரமதானம் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டது.

வெல்லாவெளி பிரதேச அமைப்பாளர் நெல்சன் தலைமையிலான சிரமதானத்தில் [illegible]

### மட்டுநகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோமசுந்தரம் ஏற்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப் படியில் ஒரு பகுதி மே மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளதாம்

### தலவாக்கொல்லை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

மான பொது வேலைநிறுத் [illegible]

### சமாதானப் பேச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரராசா தெரிவித்தார் மேலும் இந் நிகழ்ச்சியில் கட்சியின் உப செயலாளர் சுந்தரி, கலை கலா சாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கிறேசி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

### மலையக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். பலர் [illegible]

### பீ.ஜீ 34-4

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இந்த நெல்லை பயிர் செய்யப் பயன்படுத்தும் பட்சத்தில் பாரிய அழிவை சந்திக்க நேரும் என்றும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. (தி)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மாங்குளம்

பட்டுள்ளதாகவும் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதுவரை பணம் செலுத்தியவர்களுக்கு அடுத்த மாதத்திற்குள் நகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆயுதம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின்னர் மாநில இரகசிய பொலிஸார், 15-08-89 அன்று ஆவாரம் பாலியத்தில்லுள்ள ஆர். எம். சாமியின் பட்டறையில் நுழைந்து ஏ. [illegible]

### தமிழீழ

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிகளை இங்கிருந்து ஓட்டிவிரட்டிய மண், வரலாற்றில் எங்களை அடிமைகள் ஆக்கியவர்களுக்கு பாடம் கற்றுத் தந்த மண்இந்த மண், தமிழ் ஈழ மண், எங்கள் இனியமண் எங்கள் தங்க மண், எங்கள் உயர்ந்த மண் எங்கள் உயிர் மண், இந்த மண்ணை இங்கு வந்திருக்கின்ற கலைஞர்கள்நினைவுகொள்ள அந்த மண்ணில் ஒரு பிடியை முடிப் பாக்கி மண் முடிப்பை இந்த மண்ணை அவர்கள் வாழும் [illegible]

### திருமலைத்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பால் வைத்திருப்பது முக்கியமானது. உள்ளூரில் இந்தியப்படைகளைப் பயன்படுத்துவதைவிட அன்னிய மண்ணில் பயன்படுத்துவது பொருத்தமானது என்று கருதப்பட்டது. இன்றுள்ள உலக நியமங்களின்படி இப்படியான சிந்தனைப் போக்கில் தவறைக் கண்டுபிடிப்பது பொருத்தமற்றதாகும்.

இந்திய ஸ்ரீலங்கா தொடர்பாகத் தன் கொள்கையை வகுப்பதற்குக்கிடைத்த தரவுகள்தொடர்பான பிரச்சினைகளும் உண்டு. ஜூலை1988 வரை தடையில்லாத இராணுவ நடவடிக்கைகளுக்கு சுதந்திரம் வழங்கும்படி இ. அ. கா. படையினர் கேட்டனர் றோவும், வெளிவிவகார அமைச்சும் பெற்றுக் கொண்டதரவுகளின் அடிப்படையில் சகல நடிவடிக்கைகளையும் வழிநடத்தின.

(வவுனியா)

வவுனியாவில் உள்ள விவசாயக் கல்லூரிக்கு மூன்று லட்சம் ரூபாவை வடகிழக்கு மாகாண சபயின் காணி விவசாய அமைச்சு வழங்கியுள்ளது. இத்துடன் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் சமீபத்தில் இக் கல்லூரிக்கு தமது ஆண்டு நிதியிலிருந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 146 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

மேற்படி விவசாயக் கல்லூரியில் உள்ள விடுதிகள பூரணப்படுத்தல், நீர்பற்றாக் குறையைத் தீர்த்து வைத்தல், ஆயுத கூடங்கள் பூரணப்படுத்தல், இதற்கான உபகரணங்கள் தேவைகளுக்குஇப்பணம் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## சிரமதானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலையடி வெட்டையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

பாலையடி வட்டை பிள்ளையார் ஆலய வீதி சிரமதானம் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டது.

வெல்லாவெளி பிரதேச அமைப்பாளர் நெல்சன் தலைமையிலான சிரமதானத்தில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர். (37)

### வடக்கு - கிழக்கு

# உயர் பாடசாலைகளில் கர்பியூட்டர் கல்வி

(வவுனியா)

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்குள் அடங்கும் உயர் பாடசாலைகளுக்கு பதினொரு கம்பியூட்டர்வசதிகளை செய்து கொடுப்பதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் அத்துடன் இப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிப்பதற்கும் அக் கல்வித் துறையில் புதிய அபிவிருத்தித் திடங்களை கொண்டு வருவதற்கும் தாம் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அண்மையில் வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு விஜயம் செய்திருந்த செயலாளர் ஈ. ஜே. சற்குணராஜா தெரிவித்துள்ளார்.

திரு. சற்குணராஜா வவுனியாமாவட்டத்தின் கல்வி நிலைமைபற்றி சில ஆய்வுகளை செய்துகொள்ள அங்கு விஜயம் செய்திருந்தார் எனபது குறிப்பிடத்தக்கதாகும். (தி)

# விமானப் பணிப் பெண்ணின் தண்டப் பணம் குறைப்பு

(நீர்கொழும்பு)

வெளிநாட்டு விமானச் சேவை ஒன்றில் கடமையாற்றும் ஸ்ரீலங்காவைக் சேர்ந்த விமானப் பணிப்பெண் ரூபா 7,50,000 ஐ கடத்திச் செல்ல முயற்சித்தபோது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரிடம் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டார். இச் சம்பவம் கடந்த ஏப்பிரல் 24 ஆம் திகதியன்று இடம் பெற்றது.

விசாரணையின் பின் இவருக்கு ரூபா 2,25,000 அபராதம் விதிக்கப்பட்டது. விமானப் பணிப் பெண் அபராதப் பணத்தைக் கட்ட முயாத நிலையில் இருந்தமையால், சுங்கப் பகுதியினர் நீர்கொழும்பு நீதிபதி ந. மகேந்திரராஜா முன் ஆஜர் செய்தனர். அபராதத்தைக் குறைத்து, ரூபா 10,000 தண்டமாகக் கட்டும்படி நீதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார்.

விமானப் பணிப்பெண் தரப்பில் சிரேஷ்ட வழக்கறிஞரான வி. ஈ. செல்வராஜா ஆஜரானார்.

சுங்கப் பகுதியினரின் பாதுகாப்பிலுள்ள ரூபா 7,50 000 த்தை மீளப் பெறுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக வழக்கறிஞர் செல்வராஜா நீர்கொழும்பு நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலகத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

னையை ஸ்ரீலங்காவும, நாலைதீவும் தான் முடிவைடுக்க வேண்டும் என்றார்

### மட்டுநகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோமசுந்தரம் ஏற்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர், கல்வித் திணைக்களஊழியர்களுக்கான ஊக்குவிப்புப் படியில் ஒரு பகுதி மே மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளதாம்

### தலவாக்கொல்லை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான பொது வேலைநிறுத்தம் இதர தோட்டங்களுக்கும் பரவி இப்பொழுது பதி நான்கு தோட்டங்களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

### வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான நோயாளிகள் சிகிச்சை செய்வதற்காக காத்துநின்ற போது, வைத்தியர்கள் எவரையும் காணாத நிலை ஏற்பட்டது. விசாரித்துப் பார்த்தபோது, காலைச் சாப்பாட்டிற்காக வைத்தியர்கள் வெளியில் சென்று விட்டார்கள் என்று கூறப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர் தட்டுப்பாடு தொடர்ந்து நீடித்து வருகிறது. இதுபற்றி எவரும் அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை. (தி)

### நிவாரணம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகிறார்களாம்

சிவில் நிர்வாகத்தடை, இந்திய இராணுவ நடவடிக்கைகள் போன்ற நேரங்களில் இதனை வழங்குவதில் தாமதம் காட்டப்பட்டு வந்தது என்றும் ஆனால் தற்போது நிலைமை வழமைக்கு வந்து அரச அலுவலகங்களும் தினமும் நடைபெறுவதால் இதனை வழங்குவதற்கு அதிகாரிகள் தாமதிப்பது ஏன் என்றும் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

### 2ஆவது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிராம சேவை அலுவலகர்கள், வெளிக்கள அலுவலகர்கள், சமூக.நிறுவன பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடி ஆலோசனைகள் பெறப்பட்டன. (37)

சன் தெரிவித்தார்.

### சமாதானப் பேச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரராசா தெரிவித்தார் மேலும் இந் நிகழ்ச்சியில் கட்சியின் உப செயலாளர் சுந்தரி, கலை கலா சாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கிறேசி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

### மலையக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பலர் தாக்கப்பட்டு படு காயமடைந்துள்ளனர்.

1949 ஆம் ஆண்டில் இருந்து சிங்கள இனவாத அரசால் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டார்கள்- அவர்கள் வாழ்ந்த மண்ணைவிட்டு கலைக்கப்பட்டார்கள். அம் மக்களை கலந்து பேசாது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் நாடு கடத்தப்பட்டார்கள்.

#### சுயநலத் தலைமைகள்

மலையகம் வாழ். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளுபவர்கள் தமது சுய நலனுக்காக தம் மக்களை காட்டிக் கொடுக்கின்றார்கள்

சமாதானம், சமரசம்,பேச்சுவார்த்தை என ஒரு புறம் கூறிக் கொண்டு மறுபுறம் நாடு கடத்தல் விசாரணையின்றி கைது செய்தல், கொலை என தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்நிலை தொடர்வதை தமிழ் பேசும் மக்கள் யாரும் அனுமதிக்க முடியாது எனவே சிங்கள இராணுவ ஒடுக்கு முறைக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் தமது ஒன்றுபட்ட எதிர்ப்பை எதிர்வரும் 21 ஆம் திகதி முழுமையாக பொது வேலை நிறுத்தம் (ஹர்த்தால்) மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார வைத்திய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரசு, வர்த்தக தனியார் நிறுவனங்களை எல்லாம்மூடி பூரண ஒத்துழைப்பை தருமாறும், வாகன ஓட்டுநர்களும் வாகனங்களை ஓட்டாது பூரண ஒத்துழைப்பைத் தருமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

### மாங்குளம்

பட்டுள்ளதாகவும் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதுவரை பணம் செலுத்தியவர்களுக்கு அடுத்த மாதத்திற்குள் நகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆயுதம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின்னர் மாநில இரகசிய பொலிஸார், 15-08-89 அன்று ஆவாரம் பாலியத்திலுள்ள ஆர். எம். சாமியின் பட்டறையில் நுழைந்து ஏ. கே. 47 ரகத் துப்பாக்களின் உதிரிப்பாகங்களையும் கைஎறி குண்டுகளையும் கைப்பற்றினர்.

எ. எல். ரவிச்சந்திரன், ஆர் எம். சாமி, முருகானந்தம், கிட்டு, என். கே. கிருஷ்ணன், சோமு என்றழைக்கப்படும் சோமசுந்தரம் ஆகியோரின் பெயர்கள் குறறப்பத்திரிகைகளில் இடம்பெற்றுள்ளன. காளியண்ணன், பழனியப்பன் என்ற இருவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர். கோயம்புத்தூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தேடுதல் நடாத்தினர். ஆனால் வேறு தடயங்கள் எதுவும்கிடைக்கவில்லை.

### ரயிலில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்துமிருவிலுக்கு அருகில் அபாயச்சங்கிலி இழுக்கப்பட்டதால் இந்த ரயில் சிலமணி நேரம் தாமதித்தது.

### யாழ். மாநகர

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருகோடிக்கு மேல் நிதிதேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மு)

### ஆசிரியர்களுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணக்கல்வியமைச்சு யாழ் கல்வித் திணைக்களத்திடம் கோரியிருப்பதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பல ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களிலேயே பல வருடகாலமாகத் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும், வெளி மாவட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுள்ளதனாலும் மேற்படி நடவடிக்கையை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (மு)

ஜொனியன்ஸ் அணிக்கும் பற்றீசியன்ஸ் அணிக்கும் இடை -

### தமிழீழ

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிகளை இங்கிருந்து ஓட்டிவிரட்டிய மண், வரலாற்றில் எங்களை அடிமைகள் ஆக்கியவர்களுக்கு பாடம் கற்றுத் தந்த மண்இந்த மண், தமிழ் ஈழ மண், எங்கள் இனியமண் எங்கள் தங்க மண், எங்கள் உயர்ந்த மண் எங்கள் உயிர் மண், இந்த மண்ணை இங்கு வந்திருக்கின்ற கலைஞர்கள்நினைவுகொள்ள அந்த மண்ணில் ஒரு பிடியை முடிப்பாக்கி மண் முடிப்பை இந்த மண்ணை அவர்கள் வாழும் போதெல்லாம் நினைவு கொள்ள ஒவ்வொரு கலைஞருக்கும் ஒவ்வொருமண்முடிப்பை தமிழீழமண்முடிப்பைதலைவர் மாத்தயா வழங்குகின்றார் எனக் கூறினார்.

### சிங்களவர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும்போது நான் திருக்கோணமலைக்கு இரண்டு தடவை சென்றிருக்கிறேன் அங்கு செல்கின்ற போது ஒரு அதிர்ச்சி, ஆத்திரம், விரக்தி, கோபம் எல்லாமே ஏற்படுவதுண்டு.

வடக்கிலே நாங்கள் கிட்டத்தட்ட சுதந்திரமான மனிதர்களாக சிங்கள ஆதிக்கங்கள் அற்ற, சிங்களக் குடியேற்றங்கள் இல்லாத காவல் துறை இல்லாத நிலையிலேயே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

நான் இன்று காலை திருக்கடலூர் என்னும் கிராமத்திற்கு சென்றேன். அங்கு அந்த மக்கள் என்னை புலிக்கொடியை ஏற்றிவைக்கும்படி கூறினர்.அக்கிராமத்திற்கு அருகில் சிறீமாபுர எனும் சிங்களக் கிராமம் உள்ளது. அவர்கள் இன்று திருக்கோணமலை கோட்டைக்குள்ளே அகதிகளாக இருக்கிறார்கள்.

நாளை இந்த அமைதியான சூழ்நிலை இல்லாத பொழுது இந்த கொடியேற்றியதற்காக அந்த மக்கள் அழிக்கப்படலாம் ஆனாலும், அதை தெரிந்துகொண்டும் அந்த மக்கள் புலிக்கொடியை ஏற்றி பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அங்கு எந்தவீட்டிலும் ஒரு சா இருக்கும் அங்கு ஒவ்வொருவரும் ஏதாவதுமுறையில் வன்முறையால்பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

நாம் மல்லிகைத்தீவு எனும் கிராமத்தில் 63மக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற விபரங்களை அறிவதற்காக அங்கு சென்று கொண்டிருந்தோம், எங்களோடுவந்த போராளி ஒருவர் தனது வீட்டுக்கும் வரும்படி கேட்டார், அங்கு சென்றதும் 4 குழந்தைகளின் படத்தை அவர் எடுத்துகாண்பித்தார் அக் குழந்தைகள் நால்வரும் அவரது அக்காவினது குழந்தைகள் என்றார். அந்தக் குழந்தைகள் நால்வரையும், அவரது தாயையும் இந்தியப்படை கொலை செய்தது அவரது அக்கா காயப்படுத்தப்பட்டாள் அவரது உறவுகளையும் சேர்த்து 7பேரை இந்திய இராணுவம் கொன்றுள்ளதுஎன்பதை அவர் தெரிவித்தார். நான் திகைத்து விட்டேன் சாவே இல்லாத வீடுகள் குறைவு.

இன்று இறுதியாக துரைக்காடு எனும் கிராமத்திற்கு நான் சென்றேன் அங்கு வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த மக்கள் இந்த இடைக்கால அமைதி, தீர்வு எல்லாம் எங்களுக்கு வேண்டாம், நிரந்தரமான, சுதந்திரமான நிலையை தீர்வை ஏற்படுத்தித் தாருங்கள் என்றுதான் கேட்டனர்.

எனவே போராளிகளே இன்று அமைதிபோல இருப்பது அமைதி இல்லை இது நிரந்தரமானதுமில்லை என திரு.யோகிஅவர் கள்கூறினார்

தப்பட்டது. இன்றுள்ள உலக நியமங்களின்படி இப்படியான சிந்தனைப் போக்கில் தவறைக் கண்டுபிடிப்பது பொருத்தமற்றதாகும்.

இந்திய ஸ்ரீலங்கா தொடர்பாகத் தன் கொள்கையை வகுப்பதற்குக் கிடைத்த தரவுகள்தொடர்பான பிரச்சினைகளும்உண்டு.ஜூலை1988 வரை தடையில்லாத இராணுவ நடவடிக்கைகளுக்கு சுதந்திரம் வழங்கும்படி இ. அ. கா.படையினர் கேட்டனர் றோவும், வெளிவிவகார அமைச்சும் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் சகல நடிவடிக்கைகளையும் வழிநடத்தின.

வெளிநாட்டைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்ரீலங்காவில் நிலை கொண்டிருப்பதாகப் பரவலாகப்பேசிக் கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகள் எஸ்.ரி.எப்.பிரிவினருக்குப் பயிற்சி வழங்கியதாயும் இஸ்ரேலியர் கொழும்பில் இருந்ததயும்இது குறிக்கிறது. திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதென்ற உடன்பாடும் 1987 -முற்பகுதியில் இந்திய அதிகாரிகளுக்குத் தெரியவந்தது'இவ் விஷயம் இந்தியா ஸ்ரீலங்காவில் தலையிடுவதை முடுக்கி விடுவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது.